ஆரம்பக்கல்வி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

CONNEMARA PUBLIC LIBRARY
29 MAY 1955
MADRAS

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும்
ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை
ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3. தனிப் பிரதி 4 அணு

மலர் 13 | அக்டோபர் 1952 | இதழ் 10

ஆரம்ப ஆசிரியர்களின் கிளர்ச்சி

"ஜனுதிபதி, பிரதம மந்திரி, இதர மந்திரிகள் ஆகியோர் பொறுப்பு நிறைந்த வேலைகளைச் செய்து வருவதால், அதற்குத் தகுந்தபடி அவர்களுக்கு நிறையச் சம்பளம் அளிக்கப்பட வேண்டும் என்று சிலர் கூறுகிறுர்கள்.' அப்படியானுல் குறைந்த அளவில் சம்பளம் வாங்கும் ரெயில்வே சிக்னல்மேன் (தண்டவாளங்களைக் கவனித்துக்கொள்ளும் ரெயில்வே தொழிலாளர்) பொறுப்பு குறைவான வேலையைச் செய்கிறுர் என்பது அர்த்தமா? நாணயமான வேலைகளும், சமுதாயத்துக்கு மிகவும் அத்தியாவசியமானவைகளே யாகும். கைவிரல்கள் ஐந்தும் ஒரே அளவாக இல்லை. ஒவ்வொரு விரலும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறது. இருந்த போதிலும் எல்லா விரல்களும் நன்ருகச் சேர்ந்தால்தான் வேலை செய்ய முடியும். ஆகையால், எல்லோருக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் எல்லோரும் ஒன்றுபட்டு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகத் திறம்படப் பாடுபட முடியும்."

மேற்கண்ட செய்திகள், காந்தியாரின் முக்கிய சீடரான விநோபா அவர்கள் அக்டோபர் 9-ந் தேதி பாட்னாவில் ஆற்றிய சொற்பொழிவின் ஓர் பகுதியாகும்.

சென்னையில் உள்ள மத்திய சர்க்காரின் போஸ்ட் ஆபீஸ், ரெயில்வே போன்ற, அலுவலகங்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு பஞ்சப்படி ரூ. 50/ கொடுக்கப்படுகிறது. ஆனால், மாகாண சர்க்கார் அலுவலகத்தில் உழைக்கும் சிப்பந்திகளுக்கும், ஆரம்பாசிரியர்களுக்கும் ரூ. 19 முதல் ரூ. 24/ வரையில் பஞ்சப்படி கொடுக்கப்படுகின்றது. மத்திய சர்க்கார் சிப்பந்தியின் குறைந்த வருமானம் ரூ. 120 என்றால், மாகாண சிப்பந்திகளின் குறைந்த மொத்த வருமானம் ரூ. 76. ஆரம்பாசிரியர்களாயிருந்தால் ரூ. 49. இத்தகைய பேதத்தைக் கவனிக்கும் பொழுதுதான் வடநாடு, தென் நாடு என்கின்ற பிரச்சனை நம்மை அறியாமலே நம் மனதில் எழும்புகின்றது.

கனம் ராஜாஜி வடநாடு, தென்னாடு என்று பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை என்கிறார். அப்படி வித்தியாசம் பாராட்டக்கூடாது என்பவர், மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும், மாகாண சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ஏற்பட்டுள்ள சம்பள வித்தியாசத்தை ஏன் சரிசமன் செய்யக் கூடாது? கையில் பணமில்லை என்றும், மக்கள் அதிக வரி கொடுத்தால்தான் சம்பள உயர்வு செய்யமுடியுமென்றும் நொண்டிக் காரணம் காட்டுவதின் அர்த்தமென்ன? கவர்னர் மாளிகை ரிப்பேர் செய்வதற்கும், ஜமீன்தார்களுக்கு லட்சக்கணக்கில் நஷ்ட ஈடு கொடுப்பதற்கும் பணம் இருக்க, என். ஜி. ஓக்களுக்கும், ஆரம்பாசிரியர்களுக்கும் ஐந்தோ, பத்தோ உடனடியாக உயர்த்திக் கொடுக்கப் பணமில்லை யென்றால் ராஜாஜியின் ஆட்சியை, காங்கிரஸ் ஆட்சியை, எப்படி மக்கள் நம்பி ஆதரிப்பார்கள் என்று நமக்கு விளங்கவில்லை. சமீபத்தில் நடந்த முனிசிபல் தேர்தலில் 100-க்கு 40 பேர்களே காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரித்திருக்கின்றார்கள்.

நாளுக்கு நாள் நாட்டில் காங்கிரஸ் ஆட்சிக்கு மக்கள் எதிர்ப்பு அதிகரித்து வருவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? ஆட்சியை நடத்தும் அலுவல் அகங்களிலுள்ள என். ஜி. ஓக்கள் மனம் உடைந்து, காங்கிரஸ் ஆட்சியை வெறுக்கும் நிலையில் அதிருப்தி கொண்டு வருகிறார்கள். எத்தகைய கிளர்ச்சியை ஆரம்பிக்கலாமென்று யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். ராஜாஜி ஆட்சி வந்த பிறகு எல்லா ஜில்லாக்களிலும் பஞ்சம் தலை தூக்கி நிற்கின்றது.

அரிசிப் பஞ்சம் ஒருபுறமிருக்க அதைவிட அறிவுப்பஞ்சம் அதிகமாக வளர்ந்துகொண்டே போகின்றது. 500 மக்களுள்ள 4000 கிராமங்களில் ஒரு பாடசாலை வைக்கக்கூட அரசாங்கத்தால் முடிய

வில்லை. பாடசாலைகளுக்கு வேண்டிய ஆசிரியர்கள். அகப்படவில்லை. அகப்படும் ஆசிரியர்களுக்கோ போதிய சம்பளம் கொடுக்க அரசாங்கத்தில் பணமில்லை. தற்போது உண்ண உணவுஇன்றி ஆசிரியர்களோ வாழ்க்கைக்குப் போதிய சம்பளம் கிடைக்காமல் வறுமையால் வாடிக்கொண்டிருக்கின்றனர். கள்ளிக்கோட்டை, மலபார் முதலிய பகுதிகளில் உள்ள ஆரம்பாசிரியர்கள், நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பாடசாலைகளில் வேலை நிறுத்தம் செய்து (Strike) அரசாங்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ததைப்போல, மறுபடியும் கிளர்ச்சி செய்யலாமா என்ற எண்ணத்துடன் ஆரம்பாசிரியர்களைக் கூட்டி ஆலோசித்து வருகின்றார்கள். சில ஆரம்பாசிரியர்கள் உண்ணாவிரதம் ஆரம்பிக்கலாமா என யோசித்துக்கொண்டிருக்கின்றனர். இவ்விதம் அரசாங்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தால்தான் ஆரம்பாசிரியர்களுக்கு ஏதாவது ஒரு வழி ஏற்படுமென்ற எண்ணமும், காங்கிரஸ் ஆட்சியின்மீது வெறுப்பும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகின்றன.

சில பகுதிகளில் பாடசாலை மாணவர்களே "ஆசிரியர்களுக்கு வேண்டிய சம்பளத்தைக் கொடு" என்று அரசாங்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கின்றார்கள். இந்தச் சிக்கலான சூழ்நிலையில் ஆரம்பாசிரியர்கள் ஒழுங்காக உற்சாகமாகப் பாடசாலைகளில் பயிலும் பிள்ளைகளுக்கு அறிவு வளர்ச்சிக்காகப் பாடுபட தடை ஏற்படுகின்றது. சுமார் 7 கோடி ரூபாய் ஆரம்பக்கல்விக்காகச் செலவிடப்பட்டும், ஆரம்பாசிரியர்களின் உள்ளம், வறுமையால் வாடும் காரணத்தால் பொது மக்கள் பணம் வீணாக்கப்படுவது ஒரு புறமிருக்க, அறிவுப் பஞ்சம் நாட்டில் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டிருக்கின்றது.

இந்தச் சிக்கலான சூழ்நிலையை அவசியம் ஆச்சாரியார் சமாளித்து ஆகவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. உணவுப் பஞ்சத்தால் வாடும் மக்கள் ஒரு புறமும், அறிவுப் பஞ்சத்தால் அல்லல்படும் ஆரம்பாசிரியர்கள் ஒருபுறமும், நாட்டில் எதிர்பாராத கிளர்ச்சியும், புரட்சியும் ஏற்பட்டால் அரசாங்கம் நடைபெறுவதற்கே ஒரு சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்று எடுத்துக் காட்ட ஆசைப்படுகின்றோம். சமீபத்தில் டெல்லிக்குச் சென்ற ஆச்சாரியார் சுமார் 10கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி காணப்படுகின்றது. அப்படிக் கிடைக்குமானால் அதில் ஓர் பகுதியை என். ஜி. ஓக்களுக்கும், ஆரம்பாசிரியர்களுக்கும் குறைந்தது அடிப்படைச் சம்பளத்திலோ அல்லது பஞ்சப்படியிலோ குறைந்தது ரூ. 10 உடனடியாக அவசியம் உயர்த்திக்கொடுக்கப் பணத்தை ஒதுக்கி ஏற்பாடு செய்யவேண்டும். இல்லையேல் அனுவசிய

மாக நம் நாட்டில் ஆட்சியை எதிர்க்கும் கிளர்ச்சியும், குழப்பமும் காங்கிரஸ் ஆட்சியின்மீது அருவருப்பும், ஏற்படுமென்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஓர் வேண்டுகோள்

நமது மாகாணத்தில் பற்பல இடங்களில் ஆரம்பாசிரியர் சங்கங்கள் திறமையாக நடைபெற்று வருகின்றன. ஆனால், ஜில்லாவாரியாக இணைக்கப்படவில்லை. கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு, சென்னையில், மாகாண ஆரம்பாசிரியர்கள் மகாநாடு கூட்டப்பட்டதுபோல், மறுபடியும் ஓர் பெரிய மகாநாடு ஒன்றைச் சென்னையிலோ, அல்லது மதுரை, திருச்சி, சேலம் போன்ற நகரங்களிலோ கூட்டப்படவேண்டும். அதற்கு நமது பிரதம மந்திரி ராஜாஜியையே வரவழைத்து நமக்கு ஏற்பட்டுள்ள குறைகளையும், நம் நிலையையும், திட்டவட்டமாக எடுத்துக்கூறி இனி, ஆரம்பாசிரியர்களாகிய நாம் போதிய வருவாய் இல்லாமல் நாட்டில் நல்லதோர் கல்விப் பணியைச் செய்ய முடியாதென்றும், இனி ஆரம்பாசிரியர்களுக்கு உள்ள ஒரே வழி உண்ணாவிரத முறையையோ, வேலை நிறுத்தும் முறையையோ, கையாண்டு ஆசிரியர்களின் குறைகளைப் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து கிளர்ச்சி செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் ராஜாஜிக்கும் எடுத்துக்காட்டப்பட வேண்டும். அதற்கு முன்பாக எத்தகைய கிளர்ச்சியிலும், ஆரம்பாசிரியர்களை ஈடுபட வேண்டாமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

விரைவில் வரும் டிசம்பர் மாதத்தில் முனிசிபல், ஜில்லாபோர்டு, ஏய்டட் பஞ்சாயித்து எல்லாவிதமான ஆரம்பாசிரியர்களும் ஒன்று சேர்ந்த மாபெரும் மகாநாடு ஒன்றைக் கூட்ட ஏற்பாடு செய்யும்படி ஆங்காங்குள்ள ஆரம்பாசிரியர்களுக்காக உழைக்கும் முக்கிய ஸ்தர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சென்னை நகர சபைத் தேர்தலில் ஆரம்ப ஆசிரியர் வெற்றி

சமீபத்தில் சென்னை மாகாணத்தில் நடந்த முனிசிபல் தேர்தல்களில், ஆரம்ப ஆசிரியர்களில் பலர், அபேட்சகர்களாக நின்று வெற்றியும், தோல்வியும் அடைந்திருக்கின்றார்கள். ஆனால் அரசாங்கமோ, ஆரம்ப ஆசிரியர்கள் தேர்தலில் நிற்கக்கூடாது என்ற உத்தரவை இன்னும் ரத்து செய்யாமல், இது சம்பந்தமாக அனுப்பிய மனுக்களையெல்லாம் பரிசீலனை செய்துகொண்டிருப்பதாகப்பதிலளித்துக்கொண்டிருக்கிறது. ஆட்சியாளர்களை அறிவுறுத்தும் வகையில் ஆரம்ப ஆசிரியர்கள்பதவியை உதறித் தள்ளி,தேர்தலில் நின்றுவெற்றி

பெற்றும் காண்பித்திருக்கின்றனர். சில ஆரம்ப ஆசிரியர்கள் தேர்தலில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கும், சில ஓட்டுகள் வித்தியாசப்பட்ட காரணத்தால் தோல்வியுற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கும், இரு சாராருக்கும் எமது வாழ்த்துக் கூறி, அவர்களது தியாகத்திற்கும், தைரியத்திற்கும் நாம் மிக மிக மெச்சுகின்றோம், பாராட்டுகின்றோம்.

சென்னை முனிசிபல் தேர்தலில் நான்கு ஆரம்ப ஆசிரியர்கள் தேர்தலில் நின்றார்கள். அந்த நான்கில் வெற்றி பெற்றது ஒருவர் தான் தோழர் V. சுந்தரமூர்த்தி செட்டியார். இவர் ஓர் எய்டட் பாடசாலையைப் பல ஆண்டுகளாக நிறுவி, வெற்றிகரமாக நடத்திவருபவரும் ஆவர். சென்னை ஜில்லா எய்டட் பாடசாலை மானேஜர்கள் சங்கத்தின் உபதலைவராக பதவி வகித்து ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்திற்குப் பல வகைகளிலும் தொண்டாற்றி வருபவர்.

இவரது வெற்றி ஆரம்ப ஆசிரியர்களின் வெற்றியேயாகும். அன்னாருக்கு ஆரம்ப ஆசிரியர்களின் சார்பாகவும், குறிப்பாக எய்டட் பாடசாலை மானேஜர்கள் சங்கத்தின் சார்பாகவும் எமது வாழ்த்துக்களைக் கூறி, இன்னும் தாம் வகித்துள்ள புதிய உதவியின் துணைக் கொண்டு, ஆரம்ப ஆசிரியர்கள் முன்னேற்றத்திற்குப் பலவகையிலும் உழைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இம்மாதிரி ஆரம்ப ஆசிரியர்கள், பல முனிசிபாலிடிகளிலும் வெற்றி பெற்றதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. அவர்களெல்லாம் தங்கள் புகைப்படங்களையும், வாழ்க்கைக் குறிப்புக்களையும், எழுதி ஆரம்பக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

வடிகட்டும் முறை

பிரிட்டிஷ் ஆட்சியினர், இந்தியாவை ஆட்சி புரிந்த காலத்தில், அதிகம் பேர் படித்துவிடக் கூடாது என்று பலவித இடையூறுகளை ஏற்படுத்தி வைத்திருந்தனர். அப்படித் தடைகளை மீறிப் படித்து வெளி வந்தாலும் கூட, அவர்கள் தங்களது விசுவாசிகளாயும், அடிமை மோகம் கொண்டவர்களாயும் இருக்கும் தகுதியில் கல்வி முறையையும் ஏற்படுத்தியிருந்தார்கள். இது தான் நம் நாட்டில் படித்தவர்களில் சுய சிந்தனையாளர் அதிகம் பேர் உண்டாகாமல் போனதற்குக் காரணமாகும்.

பிரிட்டிஷார் உண்டாக்கி வைத்த இடையூறுகளில், பரீட்சைக்கு மாணவர்களை வடிகட்டும் முறையும் ஒன்றாகும். இந்த முறையால் நாட்டுக்கு நன்மையில்லை என்று பல காலமாகச் சொல்லப்பட்டு வந்ததையும் நேயர்கள் அறியக்கூடும். இக்குறைபாட்டைச் சுதந்திரம் கிடைத்த பிறகு, ஏற்பட்ட மந்திரி சபையினர் சென்ற சில ஆண்டுகளாய்ப் போக்கியிருந்தனர். இதனால் நாட்டு மக்களுக்கோ, அன்று படிப்பு முறைக்கோ ஒருவிதக் கேடும் வந்ததாகவும் தெரியவில்லை. இவ்வித நிலையில், தற்போது அதிகாரத்துக்கு வந்துள்ள இராசகோபாலாச்சாரி மந்திரி சபை, பழைய மந்திரி சபை உத்தரவை எடுத்துவிட உத்தரவிட்டிருக்கிறது. இப்புது உத்தரவு 1953-ம் ஆண்டுப் பரீட்சைக்கு அமலாக்கப்படும் என்று தெரிகிறது.

இப்புது உத்தரவின் மூலம், இனி 10-ம் வகுப்பு மாணவர்கள், அரசாங்கப் பரீட்சைக்குப் போகு முன்பு, பள்ளிக்கூடத்தில் ஒரு முறை வடிகட்டப்படுவார்கள். அதாவது பள்ளிக்கூடப் பரீட்சையில் தேறியவர்கள் மட்டுமே அரசாங்கப் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்கள். இதன் காரணமாக, 4-வது பாரத்திலிருந்து 5-ம் பாரத்துக்கும், 5-ஆம் பாரத்திலிருந்து 6-ஆம் பாரத்துக்கும் போகும்போதும் பரீட்சை முறைகளில் சரியானபடி வடிகட்டப்படுவார்கள் என்று தெரிகிறது. இப்படியாக 4-ஆவது பாரத்தில் தொடங்கும் வடிகட்டும் முறை 6-ஆம் பாரம் வரை நீடிக்கப்படும். ஆனாலும், இந்த வடிகட்டும் முறை —பரீட்சை வைத்துத் தேர்ந்தெடுப்பது கடினமாக இருக்காது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் ஏற்படும் பலாபலன்கள் என்ன? பல ஏழை மாணவர்கள் மேல் வகுப்புக்குப் போகாதபடி தடுக்கப்பட, இதனால் வழி ஏற்படுகிறது. எப்படியென்ற ஒரு கேள்வி எழலாம். ஏழை மாணவர்களது பெற்றோர்களது சூழ்நிலையையும், அவர்களது கல்வியின்மையையும் உற்று நோக்கும்போது, ஏழை மாணவர்களில் மிகுதியானோர், சரியான சுற்றுச் சார்பில் வளரமுடியாத நிலையில் இருக்கும்போது, சிலர் படிப்புத் துறையில் மந்தமாய் இருக்கக்கூடும். அந்த மந்தத்திற்குரிய காரணங்களை அறிந்து, அதனை மாற்றும் சிறப்பு முயற்சிகளைச் செய்தாலன்றி, படிப்புத் துறையில் மாணவர்கள்பால் இருக்கும் மந்த நிலைமையைப் போக்க முடியாது. மேலும் பரீட்சையில் வாங்கும் 'மார்க்கு' ஒன்றை மட்டும் வைத்து அறிவை மதிப்பிடுவது நமக்குச் சரியென்று தோன்றவில்லை. மேலும் இவ் வடிகட்டும் முறையால் ஒருவித நன்மையும் முன்பு ஏற்பட்டதில்லை. இவ்வித நிலையில் இவ் வடிகட்டும் முறையை மேலும் நீடிக்கச் செய்வது ஏன் என்று நமக்குப்புரியவில்லை. **(திராவிடநாடு)**

சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் மானேஜர்கள் சங்கம்

4-ஆவது மகாநாடு

சென்னை

சென்ற 14–10–52 செவ்வாய் மாலை 5 மணிக்கு சென்னை, மண்ணடி புதுத்தெரு 94–95 G. R. C. ஆரம்பப் பாடசாலை (ஆரம்பக்கல்வி ஆபீஸ்) கட்டடத்தில் கூடிய, சென்னை நகர ஆரம்பப் பாடசாலை ஆசிரிய மானேஜர்கள்–மானேஜர்கள் சங்கத்தில் 1952–ம் ௵ டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில், சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் 4–வது மகாநாடு, சென்னையில் கூட்டுவதாகத் தீர்மானித்திருக்கிறது. அதில் நம் மாகாணத்திலுள்ள ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தத் தற்காலிகமாக ஓர் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அதில் திரு. P. வீரராகவன், (ஆரம்பக்கல்வி ஆசிரியர்) தலைவராகவும், திருவாளர் N.A. நடேச முதலியார், காரியதரிசியாகவும் கீழ்க் குறித்துள்ள அங்கத்தினர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும், இதர வெளியூர் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ளும்படியும் தீர்மானிக்கப்பட்டது. தற்சமயம் இத்தகைய மகாநாட்டின் தேவை, அவசியம், அதன் பயன் மிகப் பெரியது. மகாநாட்டில் கிராண்டு, பள்ளியை நடத்தல், சம்பளம், வாடகை, பாடதிட்டம், இன்னும் கல்வி சம்பந்தமான அனேக பிரச்சினைகளைப்பற்றிப் பரிசீலனை செய்து நல்லதோர் முடிவுகள் காணப்படும். ஆதலால், அனைவரும் இதில் கலந்துகொண்டு மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தப் தங்களாலியன்ற உதவியைப் புரிந்து, நாட்டின் கல்வி முன்னேற்றத்திற்கு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

15–8–52 ஆரம்பப்பாடசாலைகளின் குறைகளையும், பலவித விஷயங்களையும், நிவர்த்திக்கும் வண்ணம் மிமோரண்டம் ஒன்று கனம் முதல் மந்திரி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் 1. கல்வி மந்திரி M. V. கிருஷ்ணராவ், 2. நிதி மந்திரி, C. சுப்ரமண்யம் 3. கிராம அபிவிருத்தி மந்திரி S. B. P. பட்டாபிராமராவ், 4. இந்நால்வருக்கும் அனுப்பப்பட்டது. அதன் சுருக்கம் நமது ஆரம்பக் கல்வியில் பின்னர் வெளிவரும்.

தற்போது இது விஷயமாக, அறிய விரும்புவோர் கடிதப் போக்கு வரத்து மூலம், காரியதரிசி N. A. நடேச முதலியார் நெ. 50. தெங்கூர், செல்வ விநாயகர் கோவில் தெருவு மைலாப்பூர். சென்னை, ஷை விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மகாநாட்டை நடத்தும் குழு

1. திரு. P. வீரராகவன் (ஆரம்பக்கல்வி ஆசிரியர்) தலைவர்
2. திரு. N. A. நடேச முதலியார் (காரியதரிசி)
3. திரு. A. R. சேஷாசலம்
4. திரு. கௌஸ் பாஷா
5. திரு. A. K. ஸர்மா (ஆசிரியர் ஆதாரக்கல்வி)
6. திரு. A. ஸ்ரீ ராமுலு நாயுடு
7. திரு. T. V கன்னையர்
8. திரு. A. வரதப்பச் செட்டியார் M. C. (சென்னை நகரசபை உறுப்பினர்)
9. திரு. V. சுந்தரமூர்த்தி செட்டியார் M. C. (சென்னை நகர சபை உறுப்பினர்)

இன்னும் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் தாலுக்காவாரியாக பாடசாலை மானேஜர்களை இக்குழுவினர் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளுவார்கள்.

P. வீரராகவன்
தலைவர்
4-வது மகாநாட்டுக் குழு

Eighth Standard Public Examination, 1952

1953-ம் ஆண்டு எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான தமிழ்ப் பாட புத்தக விளக்கம்

(பதவுரை, பொழிப்புரை, வினுவிடை, இலக்கணம், கட்டுரை, மாதிரி வினுத்தாள்கள் அடங்கியது.)

" இருவர் " தமிழ் வித்துவான்கள் எழுதியது.

விலை ரூபாய் ஒன்று.

தனிப்பிரதி வேண்டுவோர் ரூ. 1-2-0-க்கு தபால் பில்லைகள் அனுப்பவும்.

வித்தியோதயா பப்ளிகேஷன்ஸ்

30, வாலாஜா ரோடு, மவுண்ட் ரோடு, மதராஸ்—2.

பரிசு!

கி. சீனிவாசன். உதவி ஆசிரியர் கல்லாவி. [illegible]
சேலம் (மாவட்டம்.)

அந்தி சாயும் நேரம். அந்த நேரத்தில்தான் அன்பர்கள் பலர். இரயில் வண்டித் தொடர் பாலத்தின் ஓரத்தில் கூடுவர். அன்பர்கள் அங்கு கூட, காரணம் இருக்கத்தான் செய்தது! பாலத்தின் தின் ஓரத்திலே பூத்து மணங் கமழும் மலர்ச் சோலை. பச்சைப் பசேலென்று கண்ணுக்கு இனிமை தரும் பலவகைப் பயிர்கள்! வானத்தில் மின்னி மின்னி ஒளி வீசும் விண் மீன்களைப் போன்று பூத்துப் பல்லிளிக்கும் பருத்திச் செடிகள். அவ் வயலில் வேலை செய்து விட்டு, பாடிக் கொண்டு செல்லும் பாவையர்கள், இப்படிப்பட்ட பல காரணங்களால், நமது நண்பர்கள் கூடவும், தங்கள் கருத்தை பறிமாறிக் கொள்ளவும்—அப் பாலம் பாங்குடன் அமைந்திருந்தது!

கோடை விடுமுறை யாதலால் பல தோழர்கள் கூடியிருந்தனர். கல்லூரியில் பல கலைகளை கசடறக் கற்கும் காளைகள் — உயர்நிலைப் பள்ளியின் இறுதித் தேர்வை எழுதி விட்டு, எதிர் கால வாழ்க்கையை எண்ணி, முடிவை எதிர் பார்க்கும் மாணவ மணிகள்— அவல வாழ்வு வாழும் ஆசிரிய அன்பர்கள்—இப்படிப்பட்ட சிந்தனைச் செல்வர்கள் கூடி பற்பல விவாதங்களில் ஈடுபட்டனர். அவர்கள் சிதறின கருத்து முத்துக்கள்தான் இம் மணி மாலே.

'என்றென்றும் அழியாததும்' புகழை யுடையதும் எது?

குளிர் தென்றலைவிட, காதலி தரும் தமிழ் மொழிதான்.

தமிழரின் இழிநிலைக்குக்காரணம்?

வஞ்சகக் கூட்டத்தார் தன் வயலில் விளைந்த வெற்றிலையை, சுயநலம் என்ற சுண்ணாம்பைத் தடவி, அறிவைப் பாழ் படுத்தும் பாக்குத் தூளைத் தூவி, அழிவு மனப்பான்மை என்ற வாசனையைத்தெளித்துகட்டியபீடாவை, எழில் மிக்க வாழ்க்கையை நடாத்திய தமிழர்களை மயக்கி எத்தர்களாக்கி விட்டார்கள். அந்த மயக்கம் தெளிய அறிவுத் தென்றல் வீச வேண்டும்! சிந்தனை என்ற தண்ணீர் தெளிக்க வேண்டும்?

சோறுபடைத்த சோழ நாடு, இன்று சோற்றுக்குச் சோரக் காரணம்?

உழைத்து, உருக்குலைந்து வாழும் உத்தம உழவர்களுக்கு உழவுகோல் அளவுகூட நிலமில்லாமை! நவீன கருவிகளைப் பயன் படுத்தாது — பண்டைய கருவிகளைப்பயன் படுத்திப் பாடுபட்டுப் பலன் இல்லாமை!! கண்டவற்றிற்

தெல்லாம் கடவுளின்மேல் பாரத்தைப்போட்டு விட்டுபேசாமலிருத்தல்!

உதாரணமாக, மேல் நாடுகளில் பருவ மழை தவறினல்—வேண்டிய அளவு மழை பெய்விக்க, விமானத்தில் சென்று, மேகங்களை ஒன்று கூட்டி, பனிக்கட்டிகளைத் தூவி, மன மொடிந்த மக்களை மகிழ் விக்கிருர்கள் மதிவாணர்கள்.

ஆனல்...இங்கோ... கும்பகோணத்து குப்பைய சாஸ்திரியும்...மதுரை மணி ஐயரும்... மழை பெய்விக்க...வருண பகவானை நோக்கி ஜெபம் ஜெபித்ததை—இந்த இருபதாம் நூற்ருண்டிலும் செய்தித்தாள்களில் பார்க்கிறேம். இந்நிலை மாற வேண்டும்! இன்று ஒருவாறுக உணவுப் பிரச்சினையைத் தீர்த்தார்கள்.

மரம் தாவியைப் போல. தமிழ் நாட்டிலிருந்து, இந்திய நாட்டு பிரச்சனைக்கும்—அகில உலகப் பிரச்சனைக்கும் தாவினர்கள்.

இரண்டாண்டுகளாக காஷ்மீர் பிரச்சனை தீராததற்குக் காரணம்?

பிரிவினை என்ற பேரலைமோதி, பங்கு போட்டுக்கொண்ட இரு நாட்டுக் கப்பல்கள், காஷ்மீர் நாட்டின் அரசியல் நிர்ணய சபை என்னும் கரையை நாடாமலிருக்க—அன்னிய நாட்டுத் தலைவர்களின் தூண்டுதலால்...ஐக்கிய நாட்டு சபை செலுத்திய நங்கூரம் தான் காரணம்!

இந்திய நாட்டுக்கு அமெரிக்கர் அளிக்கும் டாலர்களுக்குக் காரணம்?

மக்களாட்சி என்ற வனத்தில், பொருளாதார நெருக்கடி என்ற புற்றைப் போக்கி, பூரிப்பு என்ற பசுஞ்சோலையை உண்டாக்கவும், போதாமைஎன்றமுட்புதர்களைப் பொசுக்கி, நலமான வாழ்க்கை என்ற நிர்மாண திட்டங்களை நிறுவவும், பழமைக் கருவிகள் என்ற விஷஜந்துக்களைப்போக்கிபுதுமை ...நவீனம் என்ற ‘எழில் மிகு’ கட்டிடத்தை நிறுவ...பாடு படும் தலைவர்கள்...ஆதரவு என்னும் பொதுவுடமைத் தத்துவநாடுகளை நாடாமலிருக்க—அவர்களின் அந்தஸ்தை நிலை நிறுத்த போடும் தூண்டுமுள்ளேயாகும்!

இப்படிப் பல கருத்துக்களைப் பேசிவிட்டு...சினிமா சிங்காரிகளைப் பற்றியும்...விளுத்தாள்கள் ...அண்மையில் நடந்த பொதுத்தேர்தல் எதிர்கால சென்னை மாநிலத்தின் நிலை...கட்சிப் பூசல்கள் இவற்றைப்பற்றியும் வாதித்தார்கள். உங்களின் பேச்சைக் கேட்க எனக்கு உரிமை இல்லையா? என்ற எண்ணத்தைப் பிரதி பலிப்பதுபோல வளர்பிறைச் சந்திரன் தன் பால் போன்ற வெண்ணிறத்தைப் பரிசாக அளிப்பது போல அடிவானத்திலிருந்து கிளம்பினன்!

இவ்வளவு பேச்சையும் கேட்டுக் கொண்டிருந்த ஆசிரிய அன்பர்களில் ஒருவர் தன் கண்ணீரைப் பரிசாக தருவது போல கண்

கலங்கி உட்கார்ந்து கொண்டிருந்தார். இன்னொரு ஆசிரியரோ சிலைப்போல பேசா மடந்தையாக இருந்தார்.

உலகப் பார்வையிலிருந்த வாலிபர்கள். தன் பார்வையை ஆசிரிய அன்பர்களின் பக்கம் திருப்பினர். அவர்களில் ஒருவன் கண் கலங்கிய ஆசிரியரை நோக்கி...

ஐயா! உடம்புக்கு ஏதாவது... சுகமில்லையா? அல்லது நாங்கள் பேசுவது பிடிக்கவில்லையா? தயவு செய்து கண் கலங்கும் காரணத்தை என்னிடம் அவசியம் கூறவேண்டும்.

முகிலா...! அவர் கண் கலங்கும் காரணம்...ஒரு கதையே எழுதலாம்! அவரிடம் படித்த உங்களுக்கு இருக்கும் உரிமை கூட...ஆம்...என்ன ... எண்ணியதை எடுத்துச் சொல்ல...எழுத ...தன் ஆத்மா சரி என்று பட்டதைச் செயலில் காட்ட...அவருக்கு உரிமை இல்லை.! கடமையை செய்ததற்குப்பரிசு காட்டிலுள்ள பள்ளிக்கு மாறுதல்...ஆம்! அவரை நாளை நாம் ஊரில் காண முடியாது!

ஐயா! நீங்கள் கூறுவது உண்மைதானா? எங்கள் அன்பு ஆசிரியரை நாங்கள் பார்க்க முடியாதா? பத்தாண்டு காலமாகப் பயன் பெறத்தக்கவிதத்தில் பணி ஆற்றி பள்ளனூர் பள்ளியை பகுத்தறிவின் சோலையாக்கிய ... எங்கள் பண்புமிக்க ஆசிரியரை...பழமையின் பாசி படிந்து...படிப்பது பாவம் என்றெண்ணிய பள்ளனூர் மக்களைக் கொண்டு பெற்றோர் சங்கம் நிறுவி...கல்வியின் அவசியத்தையும்...அதனால் அடையும் புகழையும் பன்முறை எடுத்துரைத்து, அவர்களின் அறியாமையை அகற்ற அல்லும், பகலும் உழைத்த உத்தமரை...வறுமை வாட்டிய போதும் சலிக்காமல் பணி ஆற்றிய சற்குணச் சீலரை நாங்கள் நாளை பார்க்க முடியாது? ஏன்...ஐயா பார்க்க முடியாது... இவரை ஊர் விட்டு ஊர் மாற்ற... பள்ளியிலுள்ள மாணவர்களுக்கு கல்வி கற்பிக்காமல்...கடமையை மறந்த கசடராக இருந்தாரா? அல்லது பள்ளியைக் காலாகாலத்திற்குத் திறக்காமல்..நடத்தாமல், வேறு வேலைகளில் ஈடு பட்டு.... இன்பமான வாழ்க்கைக்கு வழி வகுத்து வளமான வாழ்க்கை வாழ்ந்தாரா? சதி வேலையில் ஈடுபடும் சதிகார சண்டாளர்களுக்கு வெண்சாமரம் வீசினாரா? அல்லது அரசியலைக் கவிழ்க்க அரும்பாடு பட்டாரா? என்னவென்று கூறவேண்டும்.

அப்படிச் செய்திருப்பாரென்று நீ நினைக்கிறாயா?

அப்படி நினைக்கும் நச்சு மனப்பான்மை வாய்ந்தவனல்ல நான்; இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது. பள்ளனூர் மக்கள் பகுத்தறிவின் இருப்பிடம் என்று பறைசாற்றப்படுகிறது. அதற்குக் காரணம் ஆசிரியரின் உழைப்பு தானென்றும் அறிவிக்கப் படுகிறது. அப்படியிருக்க...ஆம்...

ஆண்டவனின் படைப்பே விசித்திரம்

அழகான...வனப்பு மிகுந்த... சோலையை உண்டாக்கி...அதில் மயிலையும்...மானையும் உண்டாக்கி ...மலைப் பாம்புகளையும் துஷ்ட மிருகங்களையும் ஏன் படைத்தான்; மணம் வீசும் மலர்ச்செடிகளையும், கூவும் குயிலையும் பாடிடும் பட்சிகளையும், பயன்தரும் பல மரங்களையும் படைத்தவன்—கள்ளிச் செடிகளையும், முட்புதர்களையும், கொடூரமாகக் கத்தும் கோட்டான்களையும், அமைதியை அழிக்கும் பட்சிகளையும் ஏன் படைத்தான்!

அதேபோல, பகுத்தறிவுப் பாசறையான பள்ளனூரிலும், சுயநல நோக்கங்கொண்ட சோம்பேறிகளும், பிறரைக் கெடுத்து அவர்களின் அவல வாழ்வைக் கண்டு ஆனந்தப்படும் அறிவிலிகளும், சீர்திருத்தத்தைக் கண்டால் சீறிடும் ஒரு சில சண்டாளர்களும், மொட்டை விண்ணப்பங்கள் எழுதிடும் எத்தர்களும் இருக்கத்தான் செய்வார்கள். ஐயா அறியாமை இருளைப் போக்கிய அறிவுச்சுடர், அயலூர் செல்லும் காரணத்தைக் கூறுங்கள் என்று, கொதிப்படைந்தவனைப்போல் பணிவன்புடன் வேண்டினேன்.

தூய கந்தைத் துணியைக் கொண்டு கண்ணீரைத் துடைத்துக்கொண்டு...முகிலா உன்னைப் போன்ற உத்தமர்கள் இருக்கும் பொழுது பள்ளனூர் பயன் பல பெற்று நன்னிலையை எய்தும் என்பதை, கண்டிப்பாக...உறுதியாகக் கூறுகிறேன்.நான் விட்டுச் சென்ற பணியை விடாமல்... ஓயாமல் செய்...அது நீஎனக்குச் செய்ய வேண்டிய கடமை...! நீ படிக்கும் பொழுது அடிக்கடி கூறுவேனே, எந்தத் தொழிலுக்கு வந்தாலும் ஆசிரியர் தொழிலுக்கு மட்டும் வர வேண்டாமென்று...அதை இப்பொழுது மாற்றிக்கொள் ... ஊதியத்தைப் பார்க்காதே...எதிர்காலத்தமிழகதூண்களை...உறுதிப்படுத்த... தமிழர்கள் உரிமையைப் பெற்று ...பண்டைய பெருமைகளைப் போற்ற ... மூட நம்பிக்கைகளை முறியடிக்க...நீ அவசியம் ஆசிரியர் தொழிலுக்கு வரவேண்டும். இந்தா...என்னுடைய பத்தாண்டு கதையைப் படித்துப்பார்... இன்னல்களை எதிர்த்து இன்பமுடன் வாழ் என்று....ஏதோ சில காகிதங்களைக் கொடுத்து விட்டு... பிரியா விடைப்பெற்றுப் பிரிந்து விட்டார்!

வானத்தில் வட்டமிடும் வண்ண நிலவை மறைக்கப் பார்க்கும் முகில்களைப்போல பள்ளனூர் பள்ளியில் பணி ஆற்றிய அறிவுத் தென்றலை வீசாதே என்றும்...பகுத்தறிவு நீர் ஊற்றை வராதே என்றும் தடுத்து விட்டார்கள்! வடிகட்டின முட்டாள்கள்! வாழட்டும் துன்மதியாளர்கள்.

வழக்கமாகச் செல்லும் நேரம் தவறி விட்டது. நண்பர்களும் பொறுமையைக் கை விடாமல்.

ஆசிரியர்களின் அவல வாழ்வைப் பற்றிப் பேசிக்கொண்டும்... அவர்களால் தானே இன்று உயர்நிலைப் பள்ளியிலே பதின்மர்படிக்க... கல்லூரியில் சிலர்கால் வைக்க... அரசியல் டணிமனைகளில் அறுவர் அமர்ந்திருக்க முடிந்தது என்பதை நினைத்துக்கொண்டு... அவரின்தொண்டுக்கு ஈடு இணையேது என்பதைப் பேசிக்கொண்டே அவரவர் இல்லமடைந்தோம்.

கடமைக்கு உணவை உண்டுவிட்டு ... படுக்கையைப் போட்டு ... அமர்ந்தவாறே, ஐயா! கொடுத்த காகிதங்களை எடுத்து ... அதன் கருத்தில் கண்ணைச் செலுத்தினேன். அது தான் இது!

* * *

முன் குறிப்பு :—என்னிடம் படித்த மாணவர்களில் ... நீ மாண்புமிக்கவன் ... சிறந்தவனென்ற எண்ணத்தில் ... நான் உன்னுடன் ஆசிரியன் என்று பழகாமல் ... நம் அறிவுப் புகட்டும் தோழனாகவே பழகினேன். அதனாலேயே ... எவருமறியா என் மணநாளைப் பற்றியும் ... இப்பொழுது ... எதிர் பாராத கிடைத்த மாறுதலைத்தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் .. உனக்குக்கடிதமாகத் தீட்டிவைத்திருந்த காகிதச் சுருள் தான் இது... நீ ஆசிரியப் பணி ஆற்றும்பொழுதும் பல இடுக்கண்கள் நேரும். அஞ்சற்க!

கூவிடும் குயிலின் ஒலிக்கும் கரையும் காகத்தின் குரலுக்கும் எப்படிப்பேதமுண்டோ, அதைப் போல ;என் வகுப்பில் வாசித்த வனிதாவுக்கும்எனக்கும், குடும்ப நிலையில் வித்தியாசமுண்டு! ஆம்! அவள் செல்வமாக வளர்க்கப் பட்ட செல்வக்குமரி, பணக்காரப் பாவை. ஆனால், குயிலும் காகமும் ஒரே நிறமாக...ஏறத்தாழ ....இருப்பதுபோல வனிதாவும் நானும் ஒரே நிறம். ஆனால், குயிலைப்போன்ற கருநிறமல்ல! வனப்புள்ள வண்ணத் தாமரையைப் போன்ற முகத்தில், ஒளி வீசும் கண்கள் ... எடுப்பான மூக்கு கிளி அலகுப்போன்ற...உதடு... முல்லைபோன்ற பற்கள்...அங்கங்களை வெளிக் காட்டாதபடி அணியும் ஆடை...கசடறக்கற்றுத் தெளிந்த அறிவு...பண்டிதர்கள் போற்றும் — படியான பண்பு...இப்படி எல்லா விதத்திலும் ஒன்று பட்டிருந்தோம். ஆம்! அறிவு...அறிவையும்... அழகு....அழகையும்... நாடுவதில் வியப்பில்லை... அல்லவா?

என் அப்பா ஏழை என்றாலும்...என்னை எப்படியாவது பத்தாம் வகுப்பு வரை படிக்க வைக்கவேண்டுமென்ற எண்ணத்தில் ... கடன்பட்டு ... கண்ணீர் விட்டு...வியர்வையை என் வாழ்க்கைக்காக சிந்தி...படிக்க வைத்தார். பள்ளியில் முதல்வனாக தேறினேன்! வனிதாவும் வாழ்க்கையில் வழுக்கிவிழவில்லை.

இருவரின் குறிக்கோள்படி... ஆசிரியப் பயிற்சியை இரண்டாண்டுகள் பெற்று...எங்கள் ஊர்ப்பள்ளியிலேயே பணி ஆற்றி

னும். நான் வேறு சாதி என்பதை மறந்து சகஜமாகப் பழகி, சாதிக்குச் சவக்குழி வெட்டிவிட்டதாகக் கூறினுள். ஏழை என்பதையும் மறந்து...என்னையே கணவன் எனத் தீர்மானித்துவிட்டதாக அறிவித்தாள்.

வனிதாவை, அவளின் பெற்ருேர் வேறு ஒருவனுக்கு வாரி சாக்குவதை அறிந்த வனிதா... எதிர்கால வாழ்க்கைக்கு வழி வகுத்து...முன்னேற்பாடுகளுடன்...மாவட்டத்தையும் மறந்து ...வேறு மாவட்டமான பள்ளஊர் பள்ளியில் பணி ஆற்ற— பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் வந்தோம்.

பதிவுத் திருமணம் செய்து கொண்டு...எங்களால் முடிந்த அளவு...கண்யத்தோடு கடமையைச் செய்தோம் என்பதை யாரும் மறக்கவும் முடியாது...

பல ஆண்டுகள் கழிந்தன... பள்ளஊரின் நிலையிலே தலைகீழ் மாறுதல்...இந்திய அரசியிலிலே மாறுதல்...தமிழகத்தின் விழிப்புணர்ச்சி....இப்படிப்பட்ட மாறுதலின்போது தான்...இந்திய அரசியலின் ஜனநாயகப் பொதுத் தேர்தல்...இந்த ஆண்டு...ஜனவரித் திங்களில் நடை பெறப் போவதாக அறிவிக்கப்பட்டது. ஆம்...நடந்தும் விட்டது. அந்தப் பொதுத்தேர்தலிலே...நம் ஊருக்குப் பல பிரதிநிதிகள் நிற்பதை...போட்டி போடுவதை அறிந்தேன். பதவிப் பித்தர்களும்...சுயநலம் கொண்ட சோம்பேறிகளும்...கள்ளமார்க்கட் கயவர்களும் இப்படி பலர்ப் போட்டியிட்டனர். அதிலே ஒரு, பண்பு மிக்க, பொதுஜன ஊழியர்....கல்லூரி பயின்ற காளை...பட்டதாரி ஒருவர் நிற்பதையும் உணர்ந்தேன். ஓர்நாள், செய்தித்தாளில் கீழ்காணும் செய்தி காணப்பட்டது! அதையும் மனதில் பதிய வைத்துக் கொண்டேன்.

‘கட்சியையும், சட்டையையும் பார்க்காதே!
அறிவுக்கு உன்வாக்குரிமையைச் செலுத்து!
பொதுநலத் தொண்டனுக்கு உதவி செய்!
தொப்பியைப் பார்க்காதே! மூளையைப் பார்!

என்று, ஓர் ஒப்புயர்வற்ற தலைவர் பேசியதை ‘கட்டமிட்டு’ அழகாகப் போட்டிருந்தனர்.

அதே போல, நம் தொகுதி என்னும் சேற்றில் முளைத்த, வனப்பு வாயந்த வண்ணத் தாமரையைப்போன்ற ... அறிவின் செல்வருக்கு...ஆசிரியர்களின் அவல் வாழ்வை அகற்றப் பாடுபடுவேன் என்ற அறிவொளிக்கு... பள்ளியின் முன்னேற்றத்திற்குப் பங்கம் வாராமல்....கடமையை மறவாமல்...கண்யத்தோடு...நானும் உனது அன்புமிக்க ஆசிரியையும் ....இயன்றவரை ஒத்துழைத்தோம். எதிர்க்கட்சி பிரச்சாரம் செய்ய மேடை ஏறவில்லை... மேடைக்கு வேண்டிய அலங்காரம் செய்தோம்...தேர்தல் ரிகார்

டுகளைத் திருத்த...கட்ட...பணி ஆற்றினோம்...அவரும் புகழுடைய வெற்றியை பெற்றார்... அவர் வெற்றியை அறிஞர் உலகம் வரவேற்கிறது ... நாட்டின் நல்லறிஞர்கள் நாவாரபோற்றுகின்றார்கள்...நாட்டின் நலத்தில் நாட்டமுள்ளோர் நல் ஆசி கூறுகிறார்கள்...அவரின் வெற்றிக்கு உழைத்ததாக...பொய் சாக்குகள் கூறி ...இவ்வூர் பதியினர்கள் மொட்டைக் கடிதம் எழுதினார்களாம். மேலும் படுதோல்வி அடைந்த அன்பர்...எங்கள் பள்ளியை நிர்வகிக்கும்.. நாட்டாண்மைக் கழகத்தின் உறுப்பினராம்...எங்கள் வாழ்க்கையை வளமாக்காவிட்டாலும்—வாட்டமுறவாவது செய்யாமலிருந்திருக்கலாம்... நான் செல்லும் ஊர்...கொசுக்கள் நிறைந்த மலேரியா பிரதேசமாம். காடுகள் நிறைந்த... வசதிகள் இல்லாத...அறிவுத்தென்றல் வீசாத ...ஊராம்! அதைச் சில ஆண்டுகளில் பகுத்தறிவு சோலையாக்குவேன்....நீ...உன் ஊர் பள்ளியில் பணி ஆற்றி...நான் விட்டுச் சென்ற பணியைப் பூர்த்தி செய்வாயா ?

அன்பின் ஆசி.......
மோஹன்.

கடிதத்தைப் படித்து முடித்து ...ஆசிரியர் இட்டபணியை...கட்டளையை எண்ணியவாறே, தண்ணீர் குடித்துவிட்டு உறங்கினேன்...

வகுப்புவாதம் வேண்டாம்... தீண்டாமை என்பது படைநோய் ...அதை ஒழித்தால் தான் நம் நாடு நலமடையும்....பாமரமக்கள் பயனடைய பாடுபடு என்று கூறியதற்காக என் மார்புக்கு ‘பரிசாகக் கிடைத்தது மூன்று குண்டுகள் !

அன்பேகடவுள்...உண்மையே உனது உயர்வுக்கு வழி...அடித்தவனுக்கும் அன்னமிடு....யாவரும் உன் சகோதரர்கள் என்றதற்காக எனக்குக் கிடைத்தது! சித்ரவதை செய்யும் சிலுவையில் அறையப்பட்டேன்!

ஆண்டவனுக்கு உருவம் ஏன்? நம்மில் உயர்வு, தாழ்வு ஏன்? என்று கூறியதைற்கு எனக்குக் கிடைத்த பரிசு கல்லடி !

பகுத்தறிவு பொக்கிஷம்... சிந்தனைச் செல்வன்...சீர்திருத்த செம்மல்...அறிவொளி பரப்பும் ஆசிரியனுக்குக் கிடைத்தது... மரக்கிளையிலே தூக்குக் கயிறு...

ஆம், காந்தியும், ஏசுவும், மகமது நபியும், உடையார் பாளையம் வேலாயுதமும், கண்முன் தோன்றிமறைந்தனர். பகுத்தறிவுக்குக் கிடைக்கும் பரிசு...இதுதான்!

மனிதனே! நீ உன்னை அறிந்துகொள்

(திரு. ம. முருகேசன், காஞ்சீபுரம்.)

நாம் 270 எலும்புகளோடு பிறக்கிறோம். ஆனால் 206 எலும்புகளோடு இறக்கிறோம். மிகுதி 64 எலும்புகள் என்ன ஆயிற்று? நம்முடைய இளம் பிராயத்திலே அந்த 64 எலும்புகளும் 206 எலும்புகளோடு சேர்ந்து விடுகின்றன. 507 தசைகள் நம் உடம்பில் இருக்கின்றன. அவற்றில் 83 நம்முடைய தலையில் இருக்கின்றன. ஒரு மனிதன் தேகத்திலுள்ள மின்சார சக்தியைக் கொண்டு 3 நிமிட நேரம் 25 மெழுகுவத்தி சக்தியுள்ள விளக்கை எரிக்கலாம்.

மனிதன் எடையில் தண்ணீர் 3–ல் 2 பாகம்கொண்டது. அதில் 5-ல் 1 பாகத்தை நாம் இழந்தோமானால் நமக்கு மரணம் நிச்சயம் அதில் 10ல் 1 பங்கை இழந்தால் கொடிய நோய் நிச்சயம். ஒரு நாளில் நம்முடைய இருதயம் 103389 தடவைகள் அடிக்கிறது. நம்முடைய இரத்தம் 1680 லட்சம் மைல்கள் ஓடுகிறது. 23040 மூச்சு விடுகிறதிலிருந்து 438 கன அடி காற்று நாம் உட்கொள்ளுகிறோம். நாம் உட்கொள்ளும் உணவும் குடிப்பதும் சேர்ந்து 5 பவுண்டு எடையாகிறது. 1·43 Pints பைண்டுஸ் வியர்வை நம் உடம்பிலிருந்து வெளியாகிறது. 0000046 அங்குலம நம்முடைய நகங்கள் வளர்கின்றன. 0·01714 அங்குலம் மயிர் வளருகிறது.

உடல் நலமுள்ள ஒரு மனிதனுள் காணும் இரத்தம் அவனுடைய எடையில் 12ல் 1 பாகம் இருக்கிறது. ஒரு உடல்நலமுள்ள வாலிபனுடைய இரத்த எடை 9 லிருந்து 12 பைண்டுகள் ஆகிறது. நம்முடைய இரத்தத்தில் 3 பாகம் தண்ணீர் கொண்டது 3 அல்லது 4 பைண்டு இரத்தம் ஆபத்தில்லாமல்நாம் இழக்கலாம். நமக்கு ஐந்து புலன்கள் உண்டு. இந்த ஐந்து புலன்களோடு உடல் நூலாசிரியர் புதிய ஆறு புலன்களைச்சேர்த்து நமக்குப் புலன்கள் 11 என்று சொல்லுகிறார்கள். அந்த ஆறு புலன்களாவன:—

1. உஷ்ணநிலைப் புலன்
2. சமநிலைப் புலன்
3. பசிப் புலன்
4. தசைப் புலன்
5. துன்பப் புலன்
6. தாகப் புலன்

சர்வதேச சங்க மாதாந்திர வெளியீடு, (Mirror) என்பதிலிருந்து தொகுக்கப்பட்டவை.

—செங்குந்தமித்திரன்.

அரசாங்கப் பொருளாதாரம்

ஏ. இருதயராஜ், திருச்சி செண்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர்

மனிதன் எவ்வாறு இலாபகரமான முறையில் பொருளீட்டுகிறான், அதை எப்படி சிக்கன வழியிலும் பயன்பெறும் வகையிலும் செலவழிக்கிறான் என்பதைப் பற்றிக் கூறுவதே பொருளாதாரநூல். அவன் அன்றாட வாழ்க்கையில் செல்வத்தைச் சேர்ப்பதற்காக எடுக்கும் முயற்சிகள், அப்படிச் சேர்த்த செல்வத்தைப் பயன்படும் முறையில் செலவு செய்யும் வழிகள்— இவைகளே பொருளாதாரப் பிரச்சனைகள்.

எப்படி ஒரு ராஜ்யத்தில் அரசாங்கமானது பொருள் திரட்டுகிறது, அப்பொருளை எவ்வாறு மக்களுக்குப் பயன்படும் விதத்தில் செலவிடுகிறது என்பதைப் பற்றி ஆராய்வது அரசாங்கப் பொருளாதாரம்.

குடும்பமும் அரசாங்கமும் :

குடும்ப பரிபாலனமும் இராஜ்ய பரிபாலனமும் ஏறக்குறைய ஒன்றே தான். இரண்டிலும் வருவாய்க்கு அடங்கியே இருக்க வேண்டும் செலவினங்கள். வருவாய்க்குமீறிச்செலவானால், குடும்பத்துக்கு எப்படிக் கடன் ஏற்படுகிறதோ, அது போலவே, அரசாங்கமும் கடன் வாங்க நேரிடலாம். குடும்பங்களில் அனாவசியமான செலவுகளால் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாமற் போவதுபோல இராஜ்ய பரிபாலனத்திலேயும் யுத்த காரியங்களுக்காகவும், நாட்டுக்குத் தேவையில்லாத உருப்படாத திட்டங்களுக்காகவும் ஏராளமாகப் பொருள்செலவிடப்பட்டால், மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வது கஷ்டம். ஊதாரித்தனமான செலவு ஒரு குடும்பம் சீர்குலையக் காரணமாய் இருப்பதைப்போல், ஒரு அரசாங்கம் மக்களின் நன்மையை உதாசீனம் செய்து பணத்தை விரயமாக்கினால், வளமான நாடுங்கூட சுடுகாடாகும்.

ஒரு குடும்பத் தலைவன் தனது வருவாய்க்குத் தக்கபடி செலவுகளைக் கூட்டியோ குறைத்தோ செய்கிறான். குறைந்த வருவாய் உள்ள ஒருவன்சிக்கனமாகச் செலவிடுகிறான். வருவாய் உயர்ந்தால் அதற்குத் தக்காற்போல் தன குடும்பத்துக்கு அதுவரை கிடைக்காத சில சவுகரியங்களைப் பெறும் விதத்தில் தாராளமாகச் செலவு செய்கிறான். குடும்பச் செலவுக்கு எவ்வளவு பணம் தேவையென்று முதலில் கணக்குப் பார்த்துக்கொண்டு அதன்படி எவனும் வருவாய் தேடுவது கிடையாது. அதாவது குடும்பத்

தைப் பொறுத்தமட்டில் வருவாய் தான் செலவை நிர்ணயிக்கிறது.

ஆனால், ஒரு அரசாங்கம் மக்களுக்குத் தேவைப்படும் நன்மைகளைச் செய்து தருவதற்கு என்ன செலவாகும் என்று முதலில் கணக்குப் பார்த்து, பிறகுதான் அத்தொகையை வரிகள் மூலமாகவோ அல்லது மற்ற வழிகளிலோ பெறுவதற்குத் திட்டம் தீட்டுகிறது. ஆகவே, அரசாங்கத்தின் செலவைப் பொறுத்திருக்கிறது, அதன் வருவாய் திரட்டும் திட்டம்.

ஆனால், சில சமயங்களில் வருவாய்—செலவைக் கட்டுப்படுத்தும் நிலைமையும் ஒரு அரசாங்கத்துக்கு நேரலாம். உதாரணமாக விவசாயமே முக்கிய தொழிலாகக்கொண்ட ஒரு நாட்டில் மழையின்மையாலோ மற்றெந்தக் காரணத்தாலோ பஞ்சம் அல்லது விளைவுக் குறைச்சல் ஏற்பட்டு, மக்கள் அவதிக்குட்பட்டிருந்தால் அதிக வரிகளைச் சுமத்தி அவர்களிடமிருந்து பொருள் திரட்ட முடியாத காரணத்தால், அரசாங்கமும் குறுகிய வருவாய்க்குத் தக்கபடி செலவைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகும்.

அதுபோலவே, சில சமயங்களில் ஒரு குடும்பத்திலும் செலவைப் பொறுத்து வருவாயைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ நேரிடலாம். உதாரணமாக, ஒருவன், தான் கல்யாணமாகாததற்குமுன் சொற்ப வருமானத்தைக் கொண்டு திருப்தியடைகிறான். ஆனால், அதே மனிதன் கல்யாணமானபின், குடும்பம் ஒன்று ஏற்பட்டு செலவு அதிகரிக்கக் கண்டு, முன்னைவிட அதிக நேரம் உழைத்தோ, ஓய்வு நேரங்களில் வேறு ஒரு வேலையை மேற்கொண்டோ, செலவுக்குத் தக்கபடி தன் வருவாயைக் கூட்டிக் கொள்கிறான்.

வருவாய்க்கு மேல் செலவு செய்யும் ஒரு அரசாங்கம், ஒரு குடும்பத்தைப் போலவே கடன் வாங்க நேரிடும். கடனால் ஒரு குடும்பம் நொடித்துப்போய் விடக்கூடும். அதனால் குடும்பத் தலைவன் கடன் வாங்குவதைத் தவிர்க்கவேண்டும். ஆனால், வியாபாரம், தொழில் முதலிய காரியங்களுக்கு, வருமானத்தைப் பெருக்க வசதிகள் செய்து கொள்ள கடன் வாங்குவதால் கெடுதலில்லை.

ஒரு அரசாங்கம் கடன் வாங்காமலே இருப்பது கடினம். அவ்விதம் கடன் வாங்குவதால் கெடுதலும் இல்லை. ஏனென்றால், கடன் வாங்குவதன் மூலம்தான் சில சமயங்களில் ஒரு அரசாங்கம் நீர்ப்பாசனம் போன்ற பெரிய திட்டங்களை உருவாக்கமுடியும். அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் நாட்டில் செல்வம் அதிகரிக்கச் செய்ய முடியும். எப்பொழுதுமே வரிப் பணத்தைக்கொண்டே எல்லாக் காரியங்களையும் சாதித்து விட முடியாது ஒரு அரசாங்கம்

ஒருவன் தன் வருமானத்தி லிருந்து குடும்பத் தேவைகளுக்காகச் செலவிடும்பொழுது, அந்தச் செல்வினங்கள் ஒவ்வொன்றிலுமிருந்தும் ஏறக்குறைய ஏற்றத் தாழ்வின்றி ஒரே விதமான பயனும் மொத்தத்தில் எவ்வளவு அதிகமான பிரயோஜனம் அடையலாமோ அதைப் பெற விரும்புகிறான். குறைந்த வருவாய் உள்ள ஒருவன் முதலில் உடுப்புகளுக்காக அதிகப் பணம் செலவிட்டு உணவுக்குப் போதிய அளவு பணம் இல்லாமல் அவதிப்படுகிறான். பிறகு தன் போக்கைத் திருத்திக்கொண்டு மேற்கொண்டு உடுப்புகளுக்காக ஒன்றும் செலவிடாமல் உணவுக்காக அதிகம் செலவிடுகிறான்.

அதுபோலவே ஒரு அரசாங்கம் பாதுகாப்புக்காக ராணுவத்திற்குத் தேவைக்குமேல் அதிகப் பணம் செலவு செய்தால், மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளான வைத்திய வசதி, கல்வி வசதி முதலியவைகளைச் செய்து தர முடியாது. தவறை உணர்ந்து பாதுகாப்புச் செலவைக் குறைக்கிக்கொண்டு, மக்களின் மற்ற தேவைகளுக்கு அதிகமாகச் செலவழிந்தால் அதிகப் பயன் பெற முடியும்.

நடைமுறையில் படாடோப அலங்கார வாழ்க்கையில் அதிகம் செலவிட்டு விட்டு, உண்ண உணவின்றி அல்லல்படும் குடும்பங்கள் இருப்பது போலவே கட்சிக் கட்டுப்பாடு, கட்சித் திட்டம் என்று சொல்லிக்கொண்டு உதவாக்கரையான, மக்களுக்குத் தேவையில்லாத, பல காரியங்களில் பொருளை விரயமாக்கி அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத அரசாங்கங்களும் உண்டு. மக்களுடைய உணவு உடை குடியிருப்பு முதலிய முக்கிய தேவைகளை வருவாய் போதவில்லையென்ற காரணத்தால் பூர்த்தி செய்துதர முடியவில்லை என்று கூறும் அரசாங்கங்கள் ஏராளமான பணத்தை, கதர்த் திட்டம், பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் முதலிய காரியங்களுக்காக வீணாக்குவதையும் காண்கின்றோம்.

ஒருவன் செலவு செய்யும் பொழுது தனக்கும் தன் குடும்பத்துக்கும் அவ்வப்பொழுது ஏற்படும் தேவைகளையே கவனிக்கிறான். சில சமயங்களில் தன் வயது முதிர்ந்து சம்பாதிக்க முடியாத தள்ளாத காலத்தில் தனக்கு ஏற்படக்கூடிய தேவைகளுக்காகவும் செலவிடுகிறான். தனக்குப் பின் தன் பிள்ளைகளுடைய சவுகர்யத்தை உத்தேசித்து செலவு செய்பவர்களும் உண்டு. ஆனால் தன்னுடைய மூன்றாவது நாலாவது தலைமுறையில் தோன்றப்போகும் வாரிசுகளுக்காகத் தேடிவைப்பதுமில்லை. அவர்களுக்கு ஏற்படக்கூடிய தேவைகளை நினைத்துக் கவலைப்பட்டு இப்பொழுதே அவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிப்பதுமில்லை.

ஆனால் ஒரு அரசாங்கமோ ஒரு குடும்பத்தைவிட, அதிக

ஸ்திரமான ஸ்தாபனம். பல்லாண்டுகளுக்குப் பிறகும் மக்களுக்குத் தேவைப்படக்கூடிய காரியங்களை மனதிற்கொண்டு பிற்கால சந்ததிகளின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அரசாங்கம் இப்பொழுது செலவிடவேண்டும்.

ராஜ்ய பரிபாலனத்தின் நோக்கம்.

அரசாங்கம் மக்களிடமிருந்து வரிகள் மூலமாகவோ பிறவழிகளிலோ பொருளைப் பெற்று அதை எல்லோருக்கும் பயனளிக்கும் விதத்தில் செலவு செய்ய வேண்டும். வரி வசூலிப்பதனால் மக்களுக்கு அதிக கஷ்டம் நேராமல், வசூலித்த வரிப்பணத்தை நல்ல முறையில் செலவு செய்து சமுதாயத்துக்கு எவ்வளவு அதிக நன்மை செய்யமுடியுமோ அந்த முறையில் பரிபாலனம் நடக்க வேண்டும்.

தேவைக்கு அதிகமாய் வருவாய் உள்ளவர்களிடமிருந்து வரிகளைத் தண்டி அதைக்கொண்டு போதிய வருமானம் இல்லாதவர்களுக்கு வேண்டிய பொது சவுகரியங்களைச் செய்துதர வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இதைச் சரிவர செய்தால், நாட்டின் செல்வம் பெருகுவது மட்டுமன்றி, சமுதாயத்தில் செல்வம் சரிவரப் பங்கிடு செய்யப் படாமல், ஒரு சிலர் பரம்பரைப் பணக்காரர்களாகவும், ஏனைய பெரும்பாலான மக்கள் என்றும் ஏழையாகவே வாழ்வதையும் தவிர்க்கலாம்.

அரசாங்கத்தின் செலவினங்கள்.

அரசாங்கத்தின் செலவினங்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒரு தேசத்துக்கு வேண்டிய வெளி நாட்டுப் பாதுகாப்பு, உள்நாட்டில் சமாதானத்தைக் காப்பாற்றுவது முதலானவைகளுக்குச் செலவிடுவது ஒருவகை. மக்களுடைய வாழ்க்கையின் தரத்தையும் சவுகரியத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான செலவுகள் மற்றொரு வகை.

லாபகரமான செலவினங்கள் என்றும் லாபகரமில்லாதவை என்றுங்கூட ஒரு பாகுபாடு உண்டு. ரயில்வே தபால் முதலியவைகளுக்காக அரசாங்கம் செலவிடும் பொருள் லாபகரமான தொழில் நடத்துவது போலாகும். பஞ்சைத்தைத்தவிர்க்க ஏராளமான பொருளை சர்க்கார் செலவிடும்போது லாபத்தை எதிர்பார்ப்பதில்லை.

லாபகரமில்லை என்பதற்காகச் சில செலவினங்களை எப்பொழுதுமே அரசாங்கம் தவிர்த்துவிட முடியாது. பஞ்சத்தடுப்பு, இலவச வைத்தியம், இலவசக் கல்வி முதலிய செலவினங்களால் தொழில் முறையில் லாபம் கிட்டுவதில்லை என்று தான் சொல்லலாமே தவிர மக்களுக்கு அவைகளால் அபரிமிதமான நன்மை ஏற்படுகிறதென்பதை யாரும் மறுக்க முடியாது.

நாட்டின் பாதுகாப்புக்காக, சமாதானம், நீதி இவைகளை நிலை நாட்டுவதற்காக, ரஸ்தாக்கள்

ரயில் பாதைகள் போடுவதற்காக, கல்வி, வைத்திய, சுகாதார வசதிகள் ஏற்படுத்துவதற்காக, இன்னும் மின்சார விளக்கு வசதி, குடிதண்ணீர் விநியோகம் முதலிய பொதுக் காரியங்களுக்காக, அரசாங்கம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. மேற் சொன்ன செலவினங்களில் சுகாதாரம், மின்சார விளக்கு வசதி, இலவச ஆரம்பக் கல்வி, வைத்திய உதவி, குடிதண்ணீர் விநியோகம் முதலியவை ஸ்தல ஸ்தாபனங்களாகிய மாவட்ட மன்றங்கள், நகர மன்றங்கள் முதலியவைகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்கம் நல்ல முறையில் செலவுகளைச் செய்தால் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்படுகின்றன. நீர்ப்பாசனத்திற்காகச் செலவிடுவது உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் செல்வத்தை அதிகரிக்கும். சுகாதாரம், வைத்தியசாலைகளுக்காக ஏற்படும் செலவுகள் மக்களைத் திடகாத்திரர்களாகவும், ஆரோக்கிய முள்ளவர்களாகவும் பலசாலிகளாகவும் மாற்றி, விவசாயம் தொழில் துறைகளில் உற்பத்தி பெருக வழி செய்கின்றன. கல்விக்காகச் செலவிடுவது —முக்கியமாக தொழிற் கல்விக்காகச் செலவிடுவது மக்களுடைய தொழில் நுட்பத்தையும் திறமையையும் அதிகரிக்கச் செய்கிறது. பாதுகாப்புக்காக ராணுவத்திற்கு செலவிடுவது மக்களைப் பயமின்றி வாழ உதவுகிறது. உள்நாட்டுக் கலவரங்கள் இன்றி போலீஸ் பந்தோபஸ்துடன் சமாதானத்தை நிலைநாட்டுவதற்குச் செலவிடுவது மக்கள் சொத்து சுதந்தரத்துடன் கவலையின்றி வாழ வழி செய்கிறது. ரயில்வே தபால் முதலிய போக்கு வரத்து சாதனங்கள் ஏற்படுத்துவதால் வாணிபம் வளருகிறது. இலவசக் கல்வி, ஏழைகளுக்கு விடுதிகள், இலவச வைத்திய உதவி, ஏழைப் பிள்ளைகளுக்குப் பள்ளியில் இலவச உணவு முதலியவைகளுக்காக ஏற்படும் செலவுகளால் மக்களுக்குப் புத்தி நுட்பமும், தேகாரோக்கியமும் ராஜ்ய விவகாரங்களில் அக்கரையும் நாட்டின் நன்மையிலே நாட்டமும் உண்டாகவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உதவுகிறது' ஆனல் அனுவசியமாக யுத்த தளவாடங்கள் செய்வது போன்ற செலவினங்களால் நாட்டுக்கோ, நாட்டு மக்களுக்கோ யாதொரு நன்மையும் ஏற்படுவதில்லை.

சில அரசாங்கங்கள் வேலையில்லாதவர்களுக்குப் படியும், 60 வயதுக்கு மேற்பட்டவயோதிகர்களுக்கு உபகாரச் சம்பளமும் கொடுத்துதவுகின்றன. இவ்வித செலவினங்கள் ஒரு குறிப்பிட்ட சிலருக்கே பயனளிக்கின்றன. இலவச வைத்திய சிகிச்சை இலவசக் கல்வி முதலியவைகள் அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் பொழுது மக்களில் ஒரு பகுதியினர் —ஏழைகள்—மட்டுமே பயனடைகிறார்கள். இம்மாதிரி செலவினங்களிலிருந்து பணம் படைத்தவர்கள், சொந்த செலவிலேயே வைத்திய சிகிச்சை,

கல்வி வசதிகள் செய்து கொள்ளக் கூடியவர்கள் பயனடைவதில்லை—போக்குவரத்து சாதனங்களுக்காக, நல்ல ரஸ்தாக்கள் முதலியவைகளுக்காக, நாட்டில் சமாதானம் நிலைக்க போலீஸ் பந்தோபஸ்து ஏற்படுத்த அரசாங்கம் செலவிடும் பொழுது ஏழை முதல் எல்லோரும் பயன் பெறுகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால் செல்வம் படைத்தவர்கள் இவ்வித செலவினங்களால் அதிகம் பயன் பெறுகிறார்கள் என்றே சொல்ல வேண்டும். நல்ல ரஸ்தாக்களிருப்பதால், மோட்டார் வாகனங்கள் வைத்திருக்கும் அவர்கள் தான் நன்மை அடைகிறார்கள். பணம் குவித்திருக்கும் அவர்களுக்குத் தான்—நாட்டில் கலவரம் இன்றி சொத்துக்கு நஷ்டம் ஏற்படாதபடி சொத்தேகளவு போகாதபடி போலீஸ் பந்தோபஸ்து அவசியம். ஏழை மக்கள்—பாதுகாப்பதற்குச் சொத்தோ பணமோ இல்லாதவர்கள், அவ்வளவு நன்மை அடைவதில்லை.

மக்களில் பணமுடையோரிடமிருந்து வரியாகப் பணத்தைப் பெற்று, அதில் பெரும் பகுதியை ஏழை மக்களுக்குப் பயன்படும்படி செலவிடுவதே அரசாங்கத்தின் நோக்கம். ஆனால் வரிப்பளுவை அதிகமாக்க அதிகமாக்க, பணமுடையவர்கள் சரியான கணக்குக் காட்டாமல் சர்க்காரை ஏமாற்றவும், சொத்து விவரங்களைத் தராமல் பணத்தைப் பதுக்கவும் நினைப்பார்கள். மேலும் பலர் சொத்து அதிகம் சேர்ந்தால், வருமானம் அதிகரித்தால் அதனால் வரிப்பளுவும் தாங்க முடியாமற் போகும் என்று பணத்தைச் சேமித்து வைத்து சொத்து சேகரிப்பதற்குப் பதில் தாராளமாகச் செலவு செய்யவோ அல்லது பணம் சம்பாதிக்கும் முயற்சியைக் குறைத்துக் கொள்ளவோ நேரிடும். இவ்வாறு வரிப்பளுவினால் நாட்டில் சேமிப்புக் குறையுமானால், தொழில் துறைகளில் மூலதனம் குறையும். அதனால் தொழில் உற்பத்தி குறையும் அதன் விளைவாக நாட்டின் செல்வமும் குறையும். ஆகவே வரி விதிப்பதிலும் ஒரு முறை வேண்டும். கட்டுப்பாடு அவசியம் முறையின்றி வரிகளைச் சுமத்தினால் ஒரு சில காலத்துக்குத் தான் அது நல்ல வருமானத்தைத் தரும். ஆனால் நாளடைவில் தொழில் உற்பத்தியும் அதனால் மக்களுடைய வருமானமும் குறையுமாதலால் வரி வசூலே பாதிக்கப்படும்.

மிதமாக வரிகளை விதித்து நல்ல வருமானம் உள்ளவர்களுக்கு அதிக கஷ்டமோ, நஷ்டமோ ஏற்படாமல் நடந்தால், வரிவசூல் சுலபமாகவும், அதிகமாகவும் இருக்கும். அதனால் ஏழை மக்களுக்கு நன்மைகள் செய்வதும் ஏதுவாகும். ஆனால் அதை விட்டு ஒரேயடியாக அபரிமிதமான வரிகளைச் சுமத்தினால் நாளடைவில் வரி வசூல் விழுந்து போகும்—அதனால் மக்களுக்கு நிரந்தரமான நன்மை செய்ய

முடியாது. அவ்வாறு செய்வது தினம் ஒரு பொன் முட்டை விட்டுக்கொண்டிருந்த வாத்தை திடீரென்று திரவியம் சேர்க்க நினைத்து வயிற்றைக் கிழித்து விட்ட மதியீனன் செயலுக்கு ஒப்பாகும்.

சேவை செய்யும் சர்க்கார்.

இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னால் மேல் நாடுகளிலுங்கூட அரசாங்கங்கள் அதிக செலவு செய்ததில்லை. இரண்டாவது உலகப்போர் நடந்த காலத்தில் இங்கிலாந்து அரசாங்கம் ஒரு நாளில் செலவழித்த பணம் பதினெட்டாவது நூற்றாண்டில் அதே அரசாங்கம் இரண்டு மூன்று வருஷங்களுக்குச் செலவழிக்கப் போதுமானதாயிருந்திருக்கும்! இன்றைக்கு இங்கிலாந்தில் கல்விக்கு மட்டும் ஒரு ஆண்டில் செலவழிக்கப்படும் பணம் பதினெட்டாவது நூற்றாண்டில் அதே அரசாங்கத்தின் ஒரு வருஷ செலவுக்கு ஈடு கட்டியிருக்கும். இதுபோலவே தற்காலத்தில் எல்லா நாடுகளிலும் அரசாங்கச் செலவுகள் அபரிமிதமாக அதிகரித்துள்ளன.

இதற்குக் காரணம் என்ன? அந்தக் காலத்தில் அரசாங்கங்களுக்கு இப்பொழுது இருப்பது போல் அத்தனை அலுவல்கள் இருந்ததில்லை. அக்கால அரசாங்கங்கள் பாதுகாப்பு, உள்நாட்டு சமாதானம், அதாவது ராணுவம், போலீஸ் இவ்விரண்டு வேலைகளையே கவனித்து வந்தன. ஆனால் அக்காலத்தில் அரசாங்கங்கள் இவ்விரு வேலைகளையும் முன்னைவிட அதிகத் திறமையாகவும் அதிக செலவோடும் கவனித்து வருவதுமல்லாமல், பல புதிய அலுவல்களையும் சமூக சேவைகளையும் மேற்கொண்டு விட்டன.

முன்னைய போலீஸ் சர்க்காருக்கும் இன்றைய சேவை செய்யும் சர்க்காருக்கும் வித்தியாசம் என்னவென்றால், முன்காலத்தில் அரசாங்கங்கள் மக்களின் சௌகரியங்களை வெறும் மேற்பார்வை மட்டும் பார்த்து வந்தன. மக்கள் தங்கள் சவுகரியங்களைத் தாமே கவனித்து வந்தார்கள். ஆனால் இப்பொழுதோ வென்றால் சர்க்கார் பல பொது சேவைகளை மேற்கொண்டு நமது முன்னோர்கள் நினைத்துக்கூட பார்த்திராத பலபொது அலுவல்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. முன்னைய அரசாங்கங்கள் வெறும் போலீஸ் பரிபாலனத்தைத்தான் செய்தன. இப்பொழுது அவைசேவை செய்யும் சர்க்காராகமாறி விட்டன. ஒரு ராஜயத்தின் அரசாங்கத்தின் திறமை அந்த சர்க்காரின் சேவையைப் பொறுத்தே இப்பொழுது கணக்கிடப்படுகின்றது.

கல்வி, போக்குவரத்து, பொழுது போக்கு வசதிகள், பஞ்சத் தடுப்பு நோய், அணைகள் பாலங்கள் கட்டுதல், நீர்ப்பாசன வசதிகள் மின்சாரம், குடிதண்ணீர் விநியோகம் முதலிய புது அலுவல்கள் மிகவும் ஏராளமான செலவில் கவனிக்கப்பட்டு வரு

கஜானுவில் பணமில்லையெனக் கையை விரிப்பவர் ஒருவர்; வைவதற்கு வரிந்து கட்டும் வக்கில் ஒருவர். உபதேசம் செய்யும் வருக்கு உபதேசி ஒருவர்: இந்த மாதிரி மாடல்களில்தான் நமக்குக் கல்வி மந்திரிகள் கிடைக்கிறார் களேயொழிய பிரச்னைகளைப் புரிந்து உருப்படியான பதில்களைக் கொடுப்பவர் ஒருவராவது வரவில்லை. வக்காலத்து வாங்கு பவர்களும், வசையம்புகள் எய் பவர்களும், வரப்பிரசாதம் கொடுப்பவர்களும், வானளாவப் போற்றுபவர்களும் நமக்குத் தேவையில்லை. பின் யார் தேவை! வாழ வழிகாட்டும் கல்வித் தலை வர்கள் தேவை! உரிமையைப் பகிர்ந்து கொடுக்கும் உத்தமர் கள் தேவை! ஏழ்மைக்காகப் பரிந்து பேசும் இருதயம் படைத் தவர்கள் தேவை! ஆசிரியர் களின் அல்லல்களைத் தீர்க்கும் அமைச்சர்கள் மிக மிகத் தேவை! அப்படிப்பட்டவர்கள் 1956-ஆம் ஆண்டிலாவது கிடைப்பார் களோ என்னவோ!

3. ஆசிரியர்களும் பாடத் திட் டங்களும்

இன்றைய சென்னை, காபி னெட் ' கல்வித் திட்டங்களில் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமானால், கல்வி சம்பந்தப் பட்ட அதிகாரிகளையோ, ஆசிரி யர்கள் சங்கங்களையோ, தமிழறி ஞர்களையோ, புலவர்களையோ, கட்சித் தலைவர்களையோ கலந் தாலோசித்துச் செய்யும் பண்பு பெற்றதாகஇல்லை. அப்படி எந்தத் தனி மந்திரிக்காவது உண்டானு லும் கூட கட்சிப் பற்றினாலும், தான் என்ற பெருமையினாலும் அவ்வாறு செய்ய இசைவது மில்லை. யதேச்சாதிகாரமாக அவர்கள் செய்த முடிவை சம்பந் தப்பட்ட அதிகாரிகளும், ஆசிரி யர்களும் தவறு என்று சுட்டிக் காட்டும்போது அதைக் கேட்ப தும் கிடையாது. 'நிர்மாணத் திட்டம்' என்ற பெயரால் கற் கால—உலோக கால மக்கள் வாழ்ந்த காலத்துக் கொத்த பாடத் திட்டங்களையும், செயல் முறைகளையும் தற்காலத்தில் பள் ளிகளில் புகுத்தி வீண் பண விர யத்தையும், பொருள் நட்டத்தை யும் ஏற்படுத்துவதல்லாமல் ஆசி ரியர்களின் பொறுமையையும், மாணவர்களின் திறமையையும் சோதிக்கிறார்கள். கட்சித் திட் டத்திலுள்ள 'மொழித் திணிப் பை'யும், ஆதாயமற்ற 'ஆதாரக் கல்வி'யையும், 'கதர் அபிவிருத்தி திட்ட'த்தையும் புகுத்தி மக்க ளின் உதாசினத்துக்கும் எதிர்க் கட்சித் தலைவர்களின் வெறுப் புக்கும் ஆளாகிறார்கள். வம்புக் காகப் புகுத்திய இந்தத் திட்டங் கள் வாபசாகும் நிலைக்கு வந்து விட்டது. இதற்கெல்லாம் காரண மென்ன? ஆசிரியர்களின் யோசனைகளை ஆசிரியர்களின் குரல்களான 'ஆரம்பக்கல்வி' 'பூங்கொத்து' முதலிய சஞ்சிகை களின் யோசனைகளைக் கேட்காத தால்.

கேவலம்! அந்த அற்ப ஆசிரி யர்களின் அலறல்களை அமைச்சர்

ளாகிய நாங்கள் கேட்பதா? நாங்கள் அரசியல் தலைவர்கள்; ஆள்வோர்கள்; அறிஞர்கள்; ஆளப்பிறந்தவர்கள்; ஆண்டவனின் அவதாரங்கள்; நாங்கள் வைத்ததே சட்டம்; இட்டதே பிச்சை; என்று எண்ணும் ஏதேச் சாதிகாரப் போக்கு மந்திரிகளைப் பிடித்துக்கொண்டு ஆட்டுகிறது. ஆசிரியர்களை கேலிச் சித்திரத் திரையில் எழுதி ஆனந்தப்படும் விகட ஓவியர்களாக இன்றைய மந்திரிகள் மாறியிருக்கிறார் களென்றால் அது உண்மையல்ல வென்று மறுக்க இயலுமா?

4. அரசாங்கமும் கட்சியும்.

அரசாங்கம் வேறு; அரசியல் கட்சிகள் வேறு என்ற மனப் பான்மை நம் நாட்டில் உண்டாகு மட்டும் எந்த உருப்படியான காரி யமும் நம் நாட்டில் நடைபெறாது. நம் சென்னை மாகாணத்தில் எந்த இலாகாவை எடுத்துக் கொண்டா லும் 'கட்சிப் பிரசாரவேலை' தான் தீவிரமாக நடைபெறு கிறதே யொழிய மக்களுக்காக—அவர்களின் சுகத்துக்காக-சுபிட் சத்துக்காக—எந்த ஆக்க வேலை யும் நடைபெறுவதாகக் காணோம். கல்வி இலாகாவிலும் கட்சிப் பிரசாரம் நடைபெறுகின் றது 'நிர்மாணத் திட்டம் என்ற பெயரால் கட்டாயக் கல்வித் திட் டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது எங்கள் கட்சி! முதி யோர் கல்வியை மூலை முடக்கு களிலெல்லாம் முழங்க வைத்தது எங்கள் மூத்த கட்சி! குடிசைத் தொழில்களைக் கோபுரத்துக் கேற்றியது எங்கள் அபாரக்கட்சி! வார்தாத் திட்டத்தை வாரி வழங்கி வறண்ட இந்த நாட்டை வளமாக்கிய கட்சி எங்கள் கட்சி என்று கட்சிப் பிர சாரம் செய்யும் அரசியல் மேதை களையே இன்று நாட்டிலே காண் கிறோம்.

கல்வித் திட்டத்திலே கட்சி யும், கட்சியிலே கடவுளும், அதைத் தூக்கி வைத்துக் கொண்டு நடனமாடும் ராஜர் களும் பஜகோவிந்தங்களும், பஜனை விரும்பிகளும் ராஜ நடை போடும் காட்சிகளையே பார்க்கி றோம். ஆசிரம வாசிகள் ஆட்சித் தலைவர்களாகவும் மாளிகை மன் னர்கள் மக்கள் தலைவர்களாகவும் உலவும் காட்சிகள் நம் சென்னை மாகாணத்தின் நித்திய நிகழ்ச்சி கள்.

5. நாமும் அவர்களும்.

ஆசிரியர்களும் மனிதர்கள்; அவர்களுக்கும் வாயுண்டு; வயி றுண்டு; வளமாக வாழ உரிமை யுண்டு; வலிமையுண்டு என்ற எண்ணம் மக்கள் மன்றத்திலே உலவும் நிலையை உண்டாக்க வீறு கொண்டெழுங்கள்! ஆசிரியத் தோழர்களே! வீழ்ந்த நம் சமு கத்தை வீர சமுதாயமாக்க வெகுண்டெழுங்கள்! நம்முடைய உழைப்புக் கேற்ற ஊதியம் கிடைக்காத நிலையை முறியடிக்க ஒன்று சேர்ந்து உரிமைக்குரலெழுப்புங்கள். "கொலை வாளினை எடடா மிகு கொடி யோர் செயல் அறவே" என்று

இருமோ அதைவிட சிரமம் இருக்கக்கூடாது, 100 ரூ. சம்பளம் வாங்குபவர் வரிசெலுத்தும் போது.

இரண்டாவதாக ஒவ்வொரு பிரஜையும் செலுத்த வேண்டிய வரித்தொகை, எவ்வளவு? எப்பொழுது? எப்படி? செலுத்த வேண்டும் என்பது அவனுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் தெளிவாகத்தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் வரி தண்டும் அதிகாரிகளால் மக்களுக்கு அனுவசியமாக உபத்திரவம் ஏற்படும்.

மூன்றுவதாக வரி வசூலிப்பது மக்களுக்குச் சிரமமில்லாத வகையில்; அவர்கள் இலகுவாகக் கொடுக்கக்கூடிய சமயத்தில் வசூலிக்கப்பட வேண்டும். விவசாயிகளுக்கு விதித்திருக்கும் வரியை அறுவடைக்காலத்தில் வசூலிக்க வேண்டும். அதுவுங்கூட சில வரியை ஒரேயடியாக வசூலிப்பதைவிட மூன்று அல்லது நான்கு தவணைகளில் வசூலிப்பது நல்லது. சென்னை ராஜ்யத்தில் அப்படித்தான் வசூல் செய்யப்படுகிறது.

நான்காவதாக வரி வசூலிப்பதற்கு அதிகப் பணம் செலவாகக் கூடாது. வரி தண்டுவதற்காக ஏராளமான அதிகாரிகள் நியமிக்கப்பட்டால் அவர்களுடைய சம்பளத்திற்காக வசூலித்த வரியில் பெரும் பகுதி செலவிடப்பட்டு விடும். அதனால் ஒரு பயனுமில்லை.

பொதுவாக ஒரு அரசாங்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தாயிருக்கவேண்டும், வரியிலிருந்து கிடைக்கும் வருமானம். மேலும் ஜனத்தொகை பெருகப் பெருக அரசாங்கத்தின் செலவினங்கள் வளருமாதலால் வரித்தொகை வசூலும்தானுகவே பெருகக்கூடிய தாயிருக்க வேண்டும்.

இருபதாவது நூற்றுண்டில் வாழும் நமக்கு மேலே சொன்ன நியதிகள் சர்வ சாதாரணமாகத் தோன்றலாம். ஆனல் முன் காலங்களிலெல்லாம் மன்னர்கள் முறை தவறியும், மக்கள் சக்திக்கு மீறியும் வரி வசூலிப்பதும் வசூல் செய்யும் அதிகாரிகள் முரட்டுத்தனமாயும் மிருகத்தனமாயும் மக்களிடம் நடந்து கொள்வதும், வசூலித்தபணத்தில் பெரும் பகுதியை வசூலித்தவர்களே அபகரித்துக்கொள்வதுமே சர்வ சாதாரணமாக இருந்தது.

மேற்சொன்ன விதிகளைத் தவிர, நடைமுறையில் கவனிக்க வேண்டிய, சில காரியங்களும் இருக்கின்றன. வரி விதிப்பைப் பற்றிய சகல விவரங்களும் மக்களுக்குப் புரியும் விதத்தில் இலகுவாகவும்எளிதில் தெளிவாகவும் இருக்கவேண்டும். அப்படியில்லாமல் அர்த்த பேதங்களுண்டாகும் விதத்திலும் அதைக் தெளிவுபடுத்திக்கொள்ள ஒரு வக்கீலையோ அல்லது மற்றெவரையோ நியமிக்க வேண்டிய தொல்லை ஏற்படக்கூடாது.

அரசாங்கம் விதிக்கும் வரிகளில் சிலவாவது வேண்டும் பொழுது வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள ஏதுவானதாக இருக்க வேண்டும். அப்படி வருமானத்தை அதிகப்படுத்தும் நேரத்தில் வசூல் செய்யும் செலவும் அதிகரிக்கக்கூடாது. நாட்டில் வியாபாரம், தொழில் துறைகளில் செழிப்பு ஏற்படும்போது தானகவே அதிக வருமானம் கொடுக்கக் கூடிய வரிகள் இருக்கின்றன. உதாரணமாக வருமான வரியை எடுத்துக்கொண்டால் நாட்டில் தொழில் அபிவிருத்தி ஏற்படும்போது அந்த வரியினுல் வரும் வருமானமும் தானகவே உயரும். மேலும் யுத்த நெருக்கடி ஏற்படும் பொழுது வரியைச் சிறிது உயர்த்தினுலும், ஏராளமான வருமானம் மேற்கொண்டு கிடைக்கும் ஒரு அரசாங்கம் சாமான்களின் மேல் மட்டும் வரி விதித்தால் அது அபாயமாகவே வந்து முடியும். ஏனெனில் நாட்டில் வியாபாரம் தொழில் முதலியவை செழித்திருக்கும்போது ஏராளமான வருமானம் வரும். ஆனல் நாட்டில் செழிப்புக் குறைந்து மக்கள் கஷ்டப்படும் நேரத்தில், அரசாங்கம் அக்கஷ்டத்தைப் போக்க அதிகமாகச் செலவிட வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படும் நேரத்தில், அந்த வரிகளிலிருந்து வருமானம் குறைந்து போகும்.

கடைசியாக ஒரு அரசாங்கம் குறைந்த வருமானம் கொண்டு வரக்கூடிய பல வரிகளைச் சுமத்தி மக்களைக் கஷ்டப்படுத்துவதைவிட நல்ல வருமானம் தரக்கூடிய ஒரு சில வரிகளை மட்டும் விதித்தால் நல்லது.

(திராவிட நாடு.)

“ஆரம்பக் கல்வி” ஆபீஸ்

94–95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–8
ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0
பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1–0
வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல்
முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

வீரம் வென்றது

எழுதியவர்: ஸ்ரீ நாச்சிமுத்து, இடைக்கலை—முதல் வகுப்பு. அரசர் கல்லூரி, புதுக்கோட்டை

1950–ஆம் ஆண்டு கல்லூரி வகுப்புக் கதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை

வெள்ளலைக் கைகளைக் கொட்டித் தனது உள்ளத்தின் மகிழ்ச்சியைத் தெரிவிப்பது போலக் கடல் சப்தமிட்டுக் கரையைத் தழுவி முத்தமிட்டுக்கொண்டிருந்தது. ஆங்காங்கே பாறைகளில் காக்கைகளும் கழுகுகளும் உட்கார்ந்து கொண்டும், அவைகளைச் சுற்றி வட்டமிட்டுப் பறந்துகொண்டும் கடலோசைக்குப் பக்க வாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தன. அதோ, சிறிது தூரத்திலே காவிரியின் சிறுகிளை தனது முடிவைக் கொண்டு முணுமுணுத்துக்கொள்வது போலச் சளசள வென்று கடலில் கலக்கிறது. சிறிது நேரத்திற்கு முன் தான், இவைகளை யெல்லாம் கண்டு களித்த கதிரவன் மறைந்தான். இன்னும் சிறிது தூரத்திலே வானிலே காவிரிப்பூம்பட்டினத்தின் கலங்கரை விளக்கின் ஒளி ஒரு சிறிது ஒளியுடன் ஒரு சிறிய விண்மீன் போலத் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. ஆம். அதோ அங்கே யாரோ இருவர் வெண்மணலில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர். நேரம் மறந்து பேசுபவர்கள் யாராயிருக்கலாம் என்று அருகில் சென்று பார்த்தவர்களுக்கு அவர்கள் மாறனும், பொன்னியும் தான் என்பது விளங்கும்.

மற்ற நாட்களைவிட மாறன் அன்று அதிகம் பேசுகிறான். காரணம்...அவன் நாளைமறுநாள் கப்பலேறிக் கடாரம் சென்று தன் வீரத்திற்கு மெருகு கொடுக்கப்போகிறான். இராசேந்திர சோழனது புகழைச் சாவகம், செண்பகம் ஆகியவற்றிற்கு அறிவிக்கப் போகிறான், தமிழினத்தின் பெருமையைத், தனிப் பெரும் வீரத்தைக்கடல் கடந்து விளக்கப் போகும் சிங்கத் தமிழர் கூட்டத்திலே ஒருவராக நாளை கப்பலேறப் போகிறவன் தன் அன்புக் காதலியிடம் விடை பெற வந்திருக்கிறான்.

"பொன்னி, நான் எங்குதான் சென்றாலும் உன்னை மறக்கமாட்டேன். என் தாய்திரு நாட்டையும் காவிரியின் சளசளப்புக் கீதத்தையும், வள்ளுவரது வாக்கையும் என்றும் மறவேன். வள்ளுவர் வகுத்த வீரம் இதுதான் என்று கடாரத்தவர் கன்னத்திலறைந்து காட்டப் போகிறேன். சோழ நாட்டின் கொடி, இமயத்தின் சிகரத்திலே பொறித்திருக்கும் நம் புலிக்கொடி, கடாரத்

தின் ஒவ்வொரு கோட்டையி லும் பறக்க விடப் போகிறேன். நான் சென்று வர உன் அன்புச் சொல்வேண்டும். எங்கே கூறு!'

'அன்பரே நாம் நினைத்த நினைப்புகள், கட்டிய எண்ணக் கோட்டைகள், கனவு கண்ட இன்பப் பூஞ்சோலைகள் அப்படியே பாழாகிவிடவேண்டுமா? அடுத்த இந்திர விழாவைக் கணவன் மனைவியாகக் கொண்டாடுவோம் என்றீரே அடுத்த மாதம் தானே இந்திரவிழா. அன்று சொன்னவையெல்லாம் வெறும் வாய்வார்த்தைகள் தாமா? தாங்கள் ஒருவர் தாம் தமிழக வெற்றியைக் கொணர்பவரோ? மற்ற வீரர்களெல்லோரும் போரில் வெல்ல முடியாதா.'

'பொன்னி! நீயா இப்படிப் பேசுகிறாய் புலியை முறத்தினால் துரத்திய தமிழப் பெண்டிர் மரபில் வந்த நீயா காதலனைப்போர்க்களத்துக் கனுப்ப மனம் வருந்துகிறாய். என் தந்தை, அவர் கங்கைப் போருக்குச் செல்லு முன்பு சொன்ன சொற்களை நான் காப்பாற்ற வேண்டும். ஆகவே நீ உன் முகத்திலே முறுவல் பூத்துப் போய்வா!. வெற்றியுடன் திரும்பு, தமிழர் வீரம் கடாரத்தினர் வழிபடும் தெய்வமாக மாறும் அளவு உன் வீரத்தை இரத்தப் பூச்சுடன் காட்டிவா என்று சொல்லேன் பொன்னி.'

'அன்பரே போய்வா என்று என்றால் எப்படிக் கூறமுடியும்? சின்னஞ்சிறு பிள்ளைகளாக இருந்தது முதல் உள்ளத்தை உங்களிடம் பறிகொடுத்த நான் எப்படிச் சொல்ல முடியும்? அதுவும் போன வாரம் தான் என்றும் எதிர்த்துப் பேசும் என் தமையனார் நம் திருமணத்திற்கு ஒத்துக்கொண்டது போலப் பேசியிருக்கிறார். அதை அறிந்தும், சமயத்தைக் கைவிட்டுப் போனால் என் கதி என்ன ஆகும்.

'கண்ணே, நீ காதலா வீரமா என்று கேட்கிறாய். நான் என்ன பதில் சொல்ல. காலம் கூறும் பதில். முடிவாக உன்னிடமிருந்து மகிழ்ச்சி பொங்கும் பிரிவுச் சொல்லை எதிர் பார்க்கிறேன். சொல் பொன்னி. நிலா கடலின் நீரைத் தங்கமாக்கத் தொடங்கி விட்டான்.'

'சரி...வெற்றியுடன் மீண்டும் வாரும். உங்கள் வருகையை விழிவைத்து நோக்க ஒருபேதை இருக்கிறாள் என்பதை மறந்து விடாதீர்கள். இதோ என் நினைவை அறிவுறுத்த ஒரு சிறுகத்தி குத்துவாள் ... வாங்கிக் கொள்ளுங்கள் அன்பரே.........'

அதற்கு மேல் இருவரும் ஒன்றும் பேசாமல் எழுந்து நடந்தனர். பொன்னியின் வீடு அருகில் வரும் வரையாரும் பேசவில்லை. பொன்னி திடீரென்று 'வருகிறேன்' என்று கூறிக் கொண்டே வீட்டிற்குள் ஓடிவிட்டாள்.

அடுத்த நாளுக்கடுத்த நாள் காலை, புகார்க் கடற்கரையில் எங்கும் பார்த்தாலும் மக்கள் கூட்

டம் தான். போர் வீரர்களின் வாட்களும் வேல்களும் ஆங் காங்கே மின்னின. கடலிலே சோழக் கப்பற்படை, புலிக் கொடிகளைக் காற்றிலே பறக்க விட்டுக்கொண்டு நிற்கும் பல பெரிய கப்பல்களுடன் விளங்கி யது. மன்னர் இராசேந்திரன் கடாரத்திற்குச் செல்லும் போர்த் தலைவர் செழியர் அருகில் நின்று கொண்டு உவகைமிக்க போர்ச் செய்தியை உற்சாகத்துடன் கூறு கிறார். வீரர்கள் கப்பல்களில் ஏறுகின்றனர். அதோ அவர்க ளுடன் மாறனும் செல்கிறான். அவன் கப்பல் தளத்தை அடைந் ததும் அவனையறியாமல் அவன் கைகள் அவன் கிராமத்து மக் கள் நின்ற [ஏன்] பொன்னி நின்ற திசையை நோக்கி அசை கின்றன. கப்பல்கள் சிறிது சிறி தாகக் கரையை விட்டு நழுவிச் செல்கின்றன. ஆனால்வீரர்களின் எண்ணங்களோ, தாய்நாட்டைத் தழுவி நின்றன.

மாறனுக்கும் அப்படித்தான். அவனுக்கு அவன் தந்தை கூறி யவை நினைவுக்கு வருகின்றன. நான்கு வருடங்களுக்கு முன்பு நடந்தது இன்று நடப்பதுபோலத் தோன்றிற்று மாறனுக்கு. அன்று, அவன் தந்தை போருக் குப் புறப்படுவதற்கு முதல் நாள் பூரண நிலவு. அவர் அவனைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று, இருவரும் ஓரிடத்தில் அமர்கின்றனர். தந்தை 'மாறா, நான் நாளை கங்கைப் போருக்குச் செல்கிறேன். அன்று என் தந் தையார் இமயப்படையெடுப்புக் குச் சென்றார். உனக்கும் வீரம் இருக்கிறது. நான் கற்றுத்தந்த போர், ஈட்டிச் சண்டை, குதிரை யேற்றம் உன் பயிற்சியில் உள் ளது. உடலிலே உரம் இருக்கி றது. அடுத்து வரும் போருக்கு நீ நம் குடும்பத்தின் பிரதிநிதி யாய்ச் செல்லவேண்டும் என்பது என் அவா. நம் குடும்ப வரலாற் றிலே, ஏன் சோழ நாட்டு வர லாற்றிலே கூட உன் பெயர் பொன்னெழுத்தால் பொறிக்கப் படவேண்டும் என்பது என் அவா. வீரத்தைக் காட்ட சந் தர்ப்பம் கிடைத்தால் நழுவ விடாதே வீரனாக வாழ். வீரனா கவே சாவு. நான் கங்கைப் போரில் இறந்தாலும் நீ புகழ் பெறுவதைப் பார்த்துக்கொண்டி ருப்பேன். அது தான் நான் உன்னிடமிருந்து எதிர் பார்ப் பது. எல்லாத் தமிழ்த் தந்தை களும் தம் மகன்களிடம் வேண்டு வது, என்று கூறி மாறனை உற்று நோக்கினார். மாறன் 'அப்பா உங்கள் மகன் உங்கள் பெருமை யைக் காக்க என்றும் தவறவே மாட்டான். உங்கள் வீரத்தின் மேல் ஆணை அப்பா!'

அத்துடன் மாறனது நினைவு வேறு பாதையில் செல்லத் தொடங்கிற்று. அன்று, அவன் பத்து வயது சிறுவனாக இருந்த அன்று, பொன்னியின் குடும்பம் புகாரிலிருந்து, தங்கள் முன் னோர் வாழ்ந்தகிராமத்துக்கு வரு கின்றனர். ஒரு சிறிய இரட்டை மாட்டு வண்டியில் ஒரு நடுத்தர

வயதுள்ள கணவன், ஒரு மனைவி, ஒரு சிறு பெண் ஆகியோர் வருகின்றனர். வீட்டிலிருந்து தன் பந்தை எறிந்த மாறன் அதை எடுக்கத் தெருவிற்கு ஓடி வருகிறான்; அதற்குள் வண்டி நெருங்கி விடுகிறது. அவன் பந்தை எடுப்பதற்கும் வண்டிக்காரன் வண்டியை நிறுத்துவதற்கும் சரியாக இருந்தது. வண்டிக்காரன் ஏண்டா பயலே இப்படித் தெருவின் குறுக்கே ஓடி வந்தால் யார் அவதிப்படுவது என்று அதட்டினான். அதற்குள் உள்ளேயிருந்த சிறு பெண், அவள் தான் பொன்னி 'ஏண்டா வேலா...நீ சும்மா கூச்சலிடுகிறாய்... தெருவில் நீ வண்டியைச் சரியாக ஓட்டமுடியாவிட்டால் அதற்கு அச்சிறுவனா பொறுப்பாளி...' என்று கூறினாள். அதற்குள் அவள் தந்தை வண்டியை ஓட்டு என்றதால் வண்டி சென்றது. மாறன் கண்களை உயர்த்தி நோக்கினான். தங்கச் சிலை போன்ற அழகிய சிறு உருவம், அவளின் அன்புச் சொற்கள் அவனைக்கவர்ந்தன. அவன் மேலும் எண்ணுவதற்குள் வண்டி தெருக்கோடியில் சென்று நின்றது. அன்று முதல் அவர்களிருவரையும் எங்கேயும் சேர்ந்தே பார்க்கலாம். மற்ற எல்லாக் கதைகளில் வருவது போல அவர்களது அன்பு காதலாகக் கனிந்தது.

பின்னோக்கி ஓடிய நினைவு, முன்னோக்கிப் பாய்ந்தது 'ஏன் போருக்கு நான் புறப்பட்டேன். பொன்னியின் மனம் மகிழ ஊரிலேயே இருந்திருந்தால் என் காதல் நிறைவேறியிருக்கும். என் காதல் பூ எங்கள் திருமணச் சோலையிலே நன்றாகப் பூத்திருக்கும். பொன்னியின் அண்ணா மணத்திற்கு ஒப்புக்கொண்டிருப்பார். தாயார் திருமண ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பார், இன்று என் தாய்நாட்டிற்காகத் தமிழன்னையின் புகழ் கடாரத்திலே மணம் வீசக் கப்பலேறிப் போருக்குச் செல்கிறேன். நாளை கரையிலிறங்கினால் எனது வேல்களுக்குக் கடாரத்தின் வேழங்களின் உதிரத்தைச் சுவை பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டப்போகிறது. எனது வாள் பகைவர்களது தலைகளை முத்தமிடப்போகிறது. எனது கேடயம் பகைவர்களது வாள்களை ஒடித்துச் சிதறடிக்கப்போகிறது. எனது வீரம் நல்ல உரை கல்லில் நாளை தேய்க்கப்படப்போகிறது. வள்ளுவர் கண்ட வீரத்தைக் கடாரத்தினர் காண அஞ்சி, நெஞ்சு பதைக்க, முதுகு காட்டி ஓடப்போகின்றனர். என் புகழ் தேவருலகிற்கு எட்டப் போகிறது. எது உயர்ந்தது அதா! இதா! வீரமா? காதலா?

மேலும் சிந்தனை. 'காதலுக்காக வீரத்தை விட்டிருந்தால் மணக் கோலத்தில் வீற்றிருக்கலாம். மங்கல வாழ்த்தொலி கேட்டிருக்கும். இன்று, ஏன், நாளை போர்க் களத்திலே முரசொலி கேட்கும். அதனுடனே படைத்தலைவர் செழியரது குரல் கூடிவரும், வள்ளுவர் கூறியவீரம்

தோள்களிலே தோன்றி நிற்கும். அங்கிருந்தால் நான் வாழ்ந்தேன் என்பதை மக்கள் மறந்து விடுவர். இன்று இமயத்திலே இலச்சினை பொறித்த இமயவரம்பன் பெயருள்ள வரை, கனகவிசயரைக் கடுத்து, தமிழன்னை மகிழப்படை கூட்டிச் சென்று வடவரை அடக்கி, வடவரையிலிருந்து கல்லெடுத்துக் கண்ணகிக்குச் சிலையெடுத்த செங்குட்டுவன் புகழ் உள்ளவரை, கடாரம் சென்று தமிழ்க்கொடி நாட்டிய மாறன் பெயரும் மறையாது. மணமாகி மகிழ்ச்சியுடன் வாழ்வதைவிடப் புரந்தார் கண்ணீர் மல்கச் சாவது எவ்வளவு இன்பமுடையது.

கலங்கள் அமைதியாகக் கடலில் ஊர்ந்து சென்றன. அது போலவே நாட்களும் பல சென்றன. வீரர்கள் ஒவ்வொருவரும் கரையிறங்கும் நாளையே எதிர் நோக்கி நின்றனர். அவர்களது இடையிலே செறுகியிருந்த உடைவாட்கள் கூட அதையே எதிர் பார்ப்பது போலத் தோன்றின. அடுத்தநாள் கரை தென்படும் எனக் கப்பல் தலைவர் தெரிவித்தார். வீரர்களுக்குத் தாய் நாட்டு எண்ணங்கள் மறந்தன. ஒவ்வொரு வீரனும், நாளையோ அதற்கு மறுநாளோ நடக்கப் போகும் போரிலே தான் என்ன செய்யவேண்டும்! எத்தனை வேழங்களை ஈட்டி பாய்ச்சிக் கொல்லுவோம் என்ற எண்ணம் தான் மேலோங்கியது.

அடுத்த நாள் கரை அடைந்து விட்டது. போர் வீரர்கள் தாங்கள் கொடிகட்டப் போகும் நாட்டின் கரையிலே இறங்கி விட்டனர். வாளையும் வேலையும், கேடயத்தையும் கையிலெடுத்து அணி வகுத்து நிற்கின்றனர். சிறிது தூரத்திலே பெரிய மைதானத்திலே யானைகளும் குதிரைகளும் தேர்களுமாக, கடாரத்தினர் தமிழர் வரவை எதிர்பார்த்து நிற்கின்றனர். செழியர் படையை அனுப்பு முன்பே, போருக்கு ஆயத்தமா என்று கேட்டு வரத் தூதனுப்பினர். தூதர் திரும்பினர். போர் தான்!

கடாரத்தினர் பதின் மருக்கு ஒருவன் தமிழ் வீரன். வேழங்களைக் கொல்லத் தமிழ்க் கொல்லன் செய்தளித்த, இரத்த உறையிடப்பட்ட வேல்கள்; குதிரைகளின் கும்மாளத்தை அடக்கிக் குருதியைத் தரையிலே வளர்க்க வாட்கள். தமிழினத்தின் வீரத்தைக் காண்பிக்க நீங்கள் தான். தமிழன்னையின் கொடி, இராசேந்திரரின் புலிக் கொடி எக்காளத்துடன் இந்நாட்டில் பறப்பதைக் காணக்கதிரவன்கூட நேரத்தில் உதித்து விட்டான், 'பொருதுங்கள் புறமுதுகிடச் செய்யுங்கள்' என்று செழியர் முழங்குகிறார். மஞ்சத்திலமர்ந்தப் பட்டிருக்கும் முரசு ஒலிக்கிறது. வீரர்களது நெஞ்சிலே வள்ளுவர் கூறிய வீரம், சோழயன்னரது சொற்கள் நிரம்புகின்றன போர் தொடங்கிற்று.

மாறன் வேழப்படைகளுக்கு எதிரேதான் நிற்கிறான். யானைகள் மேல் தமிழ்வேல்கள் பாய்

கின்றதை எத்தனை ஆவலுடன் வீரர்கள் நோக்குகின்றனர். மாறனது வேல் அதோ ஓர் யானையின் கண்களிலே ஊடுருவிப் பாய்கிறது. யானை வெருண்டு அவர்களது படையை நோக்கிப் பாய்ந்து அவர்களையே துதிக்கையால் தூக்கித் துவைக்கிறது. பகைவர்களுக்குள்ளே பயம். மாறனுக்கு மகிழ்ச்சி. மாறன் சிறிது நேரத்திலே தமிழ்த் தளபதியின் பக்கலிலே செல்கிறான். தமிழ்த் தளபதிக்கும் கடார வேந்தனுக்கும் வாட்போர். வாட்கள் மோதுவதால் உண்டான ஒலி, நாட்டியக்காரியின் சலங்கை ஒலியைவிட இன்பத்தைக் கொடுத்தது மாறனுக்கு. போர், மின்னல் வீச்சுப் போன்றிருந்தது. ஆனால் அதே நேரத்தில் தமிழ்த் தளபதியின் அருகி லிருந்து கடார வீரன் முதுகுப் புறம் செழியரைக் குத்தச் செல்கிறான். ஆனால் மாறனின் சிறு கத்தி, பொன்னியின் காதல் பரிசு அவனது நெஞ்சை ஊடுருவி விட்டது. தளபதி பிழைத்தார். தமிழகம் பிழைத்தது. அவரது நன்றி கலந்த பார்வை மாறனின் இதயத்தை இன்பத்தில் ஆழ்த்தியது.

காதல் பரிசு, வீரத்தின் பரிசாகத் திகழ்ந்தது. காதல் வீரத்திற்கு ஏணிப்படியாக இருந்தது. ஆம் அந்தச் சிறுகத்தி தான், அன்றைய வெற்றிக்கே வித்திட்டது. வீரமிக்க உயிர்த் தளபதியின் உயிரைக்காத்து தமிழன்னையின் மானத்தைக் காத்தது. இந்த இடத்திலே தமிழ் மகளின் காதல் தமிழனின் வீரத்தை மெருகிட்டது. தமிழ்க் கொல்லனது கத்தி, கடார வீரனின் அல்ல, கோழையின் குருதியைச் சுவைத்ததன் பலன் மாறன் ஒரு பக்கப் படை வரிசையின் தலைவனாக உயர்த்தப்பட்டான். அந்த நேரத்திலே பொன்னியின் புன்னகை பூத்த முகம் வாழ்த்துக் கூறுவதாக அவனுக்குத் தோன்றியது.

பகற் போர் துவங்கிற்று. போர்க்களம் குருதிச்சேறு நிரம்பிய வயற்காடாகக் காட்சியளித்தது. மாறனின் படை வரிசை தான் முன்னணியில் நிற்கிறது. மாறன் தன் வாளுக்கு இரை தேடி அலைகிறான். அவனுக்கு அகப்பட்டான் பகைத்தளபதி. அவன் மாறனை மறித்து வார்த்தைகள் கூறத் தொடங்கினான். போர்க்களத்திலே சொற்போரைத் தொடங்க நினைத்தான் அத்தளபதி. மாறனுக்கு, ஏன் தமிழனுக்கே அது புதிதுதானே. திகைத்தான்; ஆனால் திணறிப் போகவில்லை. தளபதி 'தமிழர்களாம்...... வீரத்திற்கே உறைவிடமாம்...... தாங்களே கட்டிக் கொண்ட பட்டத்தை எட்டுத் திக்கிலும் கூச்சமின்றிக் கூறுகின்றனர்...... வள்ளுவராம்......குறளாம்......' என்று அர்த்தமற்ற கோவையில்லாத, ஒன்றுக் கொன்று சம்பந்தமில்லாத வார்த்தைகளைக் கூறினான். மாறனுக்குக் கோபமூட்டத்தான் இவையெல்லாம். 'தமிழா....... அவர்

களது வீரத்தைக் கங்கை நாட்டானிடம் கேள். கதை கதையாகக் கூறுவான். தங்கள் வீரத்தைக் காட்ட, எதிர்த்தவரையெல்லாம் முறியடித்துக் கங்கையைக் கடந்தும், வழிமறைத்து நின்ற இமயத்தையே இடித்து, அதன் நெற்றியிலே வீரத்தைப் பொறித்து வைத்த பெற்றியை அந்த இமயத்தையே கேள். நன்றாகக் கூறும். கடாரத்திலே இன்று பறக்கப் போகிறது எங்கள் கொடி...... நாளை சாவகம் சண்பகம். பின் ஏன் எங்கள் வீரத்தை எட்டுத் திக்கிலும் முரசு கொட்டிச் சொல்லக் கூடாது. வள்ளுவரை, எங்கள் முன்னோரை நீ அறியமாட்டாய். அவரது குறள் வாழ்க்கை வழிகாட்டி...... முரட்டுக் கொள்கைகளுக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் வள்ளுவர் அமைத்த பலிபீடம். தமிழர்களது வீரத்தைக் காதலைத் தரணியோர்க்கு எடுத்துக் கூறும் பொன்னேடு. இன்னும் வள்ளுவரைப் பற்றி வகை வகையாகக் கூறலாம். எனது வாள் அதற்கு நேரம் செலவிட மறுக்கிறது. வள்ளுவரது குறளை உணராது குறை கூறிய உனது உடலைச் சுவைக்க வாளின் உள்ளம் குமுறுகிறது. எடு உன் வாளை... பின் சாவு உலகத்திலே வள்ளுவரையே கண்டு அவர் பெருமையை அறிந்துகொள்.

வாளும் வாளும் மோதின. கேடயங்களினின்றும் தீப்பொறிகள் கிளம்பின. மாறனது கைகளைக் காட்டிலும் அவனது சினமே கடாரத்தானை வென்று விடும்போல் தோன்றுகிறது. மாறனது தந்தையின் வாட்பயிற்சி, உணர்ச்சி வேகத்துடன் ஒத்துழைக்க முன் வந்தது. முதலிலே மாறனது வாள் தளபதியின் காலைப் பதம் பார்த்தது. அதே நேரத்திலே அவனது கையிலே அடி. அந்த மின்னல் வெட்டு நேரத்திலே தந்தையின் சொற்களான 'வீரனாக வாழ், வீரனாகச் சாவதை ஏற்றுக் கொள். குடும்பப் பெருமையை உயர்த்து' என்பவைகளும் பொன்னியின் காதற்சொற்களும் அவனது எண்ணத்திலே தோன்றி மறைந்தன. அடுத்த கணம் ஆவேசப் போர். மாறன் தளபதியின் தலையை உருட்டி விட்டான் தரையிலே. கடாரத் தளபதியின் இரத்தம் தமிழ் வீரனின் கால்களைத் தொட்டு வணங்கிற்று. மாறனது மனதிலே மட்டற்ற மகிழ்ச்சி கரை புரண்டோடியது. கடாரத் தளபதி இறந்ததைக் கண்ட கடாரப் படைகள் ஊர்நோக்கி ஓட ஆரம்பித்தன. தமிழர்களின் வெற்றிப் பாதையில் மற்றொரு மைல் கல் நட்டாகி விட்டது. ஆனால் எங்கிருந்தோ........ இல்லை இல்லை அதோ ஒரு தேரில் ஓடுகிறானே ஒரு கடாரத்தான் அவன் விட்ட வேல் மாறனது நெஞ்சிலே உறையிலே போட்டால் செல்லும் வாளைப்போல ஊடுருவிச் சென்றது. மாறனது மணிமுடி தரையிலே முத்தமிட்டுக் கிழிறகிது. ஆம் மாறனுக்கே தன் திடக்கா

நேரம் உயிருடன் இருக்க முடியாது என்பது தோன்றுகிறது. ஆனால் அவன் வாய் 'பொன்னி! .... காதல்......... கங்கைப் போர்.... வீரம்.... ஆ... வீரம் தான் வென்றது'.......என்றது. அருகிலிருந்த அத்தனை பேரும் 'உமக்கு என்ன வேண்டும் மாறரே', என்று ஏககாலத்தில் கேட்டனர். மாறன் பொன்னியிடம் இந்த மோதிரத்தை...... ஆ...... அவ்வளவுதான் தலை தொங்கி விட்டது கண்கள் இமைகளுக்குள் சென்று மறைந்ததுபோல் கதிரவனும் மேகத்தில் மறைந்தான். இந்த இடத்திலும் தமிழனது வீரம் வென்று விட்டது. காதல் தோற்றுப் போய்விட்ட நிலை ஏற்பட்டது.

அன்று போரிலே வென்றனர் தமிழர். கடாரக் கோட்டையிலே புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்தது. அதைப் பார்த்து மகிழ மாறன் இல்லை. செழியர் அங்கு ஆட்சி நடத்த அறிவாளிகள் சிலரையும், அவருக்குச் சிறு படையும் கொடுத்து மீதிப் படையுடன் தாய்நாடு நோக்கி விரைந்தார். வரவேற்க மன்னர் இராசேந்திரர், மந்திரிகள், மக்கள் பலர் வந்திருந்தனர். செழியர் சோழரிடம் மாறனின் வீரத்தையும், அவனே வெற்றிக்குக் காரணம் என்பதையும் அவனது வீர முடிவையும் சோகங்கலந்த மகிழ்ச்சியுடன் கூறினார். சோழர் வெற்றிப் பாதையைத் திறந்து வைத்த வீரர்க்கு என் நன்றியைத் தெரிவிக்க முடியவில்லையே என்று வருந்தினார்.' ஆனால் பின் மாறனது நினைவுச் சின்னமாக அவனது ஊர்க் கடற்கரையில் உயரமிக்க வெண்கல் தூண் ஒன்று நிறுத்தி அதிலே அவனது வீரத்தன்மையைப் பொறித்தார்.

ஆனால் பொன்னி அதே நேரத்திலே கண்ணீரும் கம்பலையுமாக நிற்கிறாள். மோதிரம் கொணர்ந்த வீரர்களை வெறித்துப் பார்க்கிறாள். பின் விரட்டுகிறாள். பொன்னி பின் பைத்தியம்தான். 'மாறா, காதல்பாதை முடிந்ததா...... வீரம் வென்றதா?... பின் அவள் சிறிது நாள் கழித்து அந்தக் கல்தூணில் காதல் தோற்றது. வீரம் வென்றது' என்று உண்மைச் சொல்லை நன்றாகப் பொறித்துவிட்டாள். ஆனால் அவள் பைத்தியக்காரி தானே என்றது உலகம். பைத்தியக்காரி தானா?

மாணவர்' மன்ற வெளியீடு 1951.

மாணவர் மன்றம்

சென்னை—1

21–ஆம் ஆண்டுப் பரிசுப் போட்டித் தேர்வுகள்
1952

ஆரம்பப் பள்ளி வகுப்புகள்

(பாப்பா வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை)

பாடி நடித்தல், கதை சொல்லல்; பேச்சு ஆகிய போட்டிகள்

(1952 நவம்பர் 15, 16 ஆம் நாட்களில் நிகழும்)

பெருந்தகையீர்,

சென்னை மாணவர் மன்றத்தினராய நாங்கள் சிறு குழந்தைகளை உற்சாகப் படுத்தி அவர்களை இசையிலும் நடிப்பிலும் பேச்சிலும் ஊக்குவதற்காகப் பலவிதமான போட்டிகள் நடத்தி வருகின்றமை நீங்கள் அறிந்ததே. இவ்வாண்டும் வழக்கம்போல் அப்போட்டிகளை நடத்திக் குழந்தைகளுக்குப் பணமுடிப்பு, வெள்ளிப்பதக்கங்கள், புத்தகங்கள் முதலியன பரிசாக வழங்க எண்ணியுள்ளோம். எங்கள் முயற்சியின் உட்கருத்தை நன்குணர்ந்து குழந்தைகளை இப்போட்டிகளில் தவறாமல் பங்கு கொள்ளுமாறு செய்ய வேண்டுகிறோம்.

போட்டி விவரம்

1. பள்ளிக்குச் செல்லாத பாப்பாக்களுக்கும் முதல் வகுப்பில் படிக்கும் பாப்பாக்களுக்கும் **பாடி நடித்தல் போட்டி.**

2. இரண்டாம் வகுப்பு, மூன்றும் வகுப்புக்களில் படிக்கும் குழந்தைகளுக்குப் **பாடி நடிக்கும் போட்டியும், கதை சொல்லும் போட்டியும்.**

3. நான்கு, ஐந்தாம் வகுப்புக் குழந்தைகளுக்குப் **பாடி நடிக்கும் போட்டியும் பேச்சுப் போட்டியும்.**

பரிசுகள்

முதற் பரிசு : **108 காலணுக்கள் கொண்ட பணமுடிப்பும் வெள்ளிப் பதக்கமும்.**

இரண்டாம் பரிசு : வெள்ளிப் பதக்கம்.

மூன்றாம் பரிசு : தமிழ் நூல்கள்.

பரிசுகள் ஒவ்வொரு பிரிவிலுமுள்ள ஒவ்வொரு போட்டிக்கும் தனித் தனியே வழங்கப் பெறும்.

இடமும் காலமும் : 15-11-52 சனிக்கிழமை பகல் 2 மணி முதல்

1. நகராண்மைக் கழகப் பெண்பள்ளி, கடைவீதி, மயிலை.
2. ந. க. பெண்பள்ளி, T. P. கோயில் தெரு, திருவல்லிக்கேணி
3. நகராண்மைக் கழக உயர் பள்ளி, நுங்கம்பாக்கம்.

16—11—52 ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணி முதல்

1. நகராண்மைக் கழக ஆண்பள்ளி, கொண்டித்தோப்பு.
2. நகராண்மைக் கழக ஆண்பள்ளி, இராயபுரம்.
3. நகராண்மைக் கழக ஆண்பள்ளி, புரசை.

போட்டிகளில் கலந்து கொள்ளும் குழந்தைகள் மேற்குறித்த ஆறு இடங்களில் எந்த விடத்தில் நிகழும் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புகின்றார்களோ அந்த இடத்தையும் தங்கள் பெயரையும், படிக்கும் பள்ளியின் பெயர், வகுப்பு, கலந்துகொள்ளும் போட்டி முதலிய விவரங்களையும் விளக்கமாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

கட்டணம் போட்டி ஒன்றுக்கு நான்கு அணா

விண்ணப்பமும் கட்டணமும் அனுப்பவேண்டிய இறுதி நாள் திங்கள் 20-10-52. கட்டணமும் விண்ணப்பமும் அனுப்பவேண்டிய முகவரி :

மயிலை சிவ—முத்து, 17, இரத்தின முதலி தெரு, சென்னை-1.
(கொண்டித்தோப்பு, சிவஞானம் பார்க்குக்கு அருகே.)

டாக்டர் S. தருமாம்பாள்
தலைவர்

வல்லை. பாலசுப்பிரமணியம், B. A.,
A. M. கணபதி, M. A.
அமைச்சர்கள்

4—5 ஆம் வகுப்புக்கள்—பேச்சுப் போட்டி

கீழ்வரும் உரைநடைப் பகுதியை உணர்ச்சி தோன்றச் சொல்லுதல் வேண்டும்.

நிமிர்ந்த வாழ்வு

தோழர்களே, உங்களுக்கு ஒன்று கூறுகிறேன். இன்று சிறுவர்கள் நாம். ஆனால் நாமே நாளை இந்த நாட்டை ஆளப் போகிறோம். நமது பொறுப்பு மிகவும் பெரியது.

நம் பழம் பெருமைகளைப் பேசிப் பேசிக் காலங் கழிக்காதீர்கள் உலக அரங்கில் நம் நாடு சிறந்து விளங்க நீங்கள் உழைக்கவேண்டும். உங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் புத்துணர்ச்சி எழவேண்டும்; சாந்தம், சமரசம், சன்மார்க்கம், சகோதரத்துவம் என்னும் நற்குணங்கள் நிறைந்து விளங்கவேண்டும். அடக்கமாய் இருங்கள்; ஆனால் அடிமை யாகாதீர்கள். அறிவை நிரப்பிக்கொள்ளுங்கள்; ஆனால் ஆணவத்தை வெறுத்துத் தள்ளுங்கள். கல்விப் பெருங் கோட்டை கட்டுங்கள். நாட்டில் இன்று காணும் பசியும், பஞ்சமும் போக்கக் கைத்தொழிலும் உழவுத்தொழிலும் வளர்க்க முன்வாருங்கள். எழுந்திருங்கள்; நிமிர்ந்து நில்லுங்கள். நம்மால் முடியாதது ஒன்றுமே இல்லை என்று உறுதிகொள்ளுங்கள். வெற்றி உங்களுக்கே.

—தணிகை உலகநாதன்.

4—5 ஆம் வகுப்புக்கள்—பாட்டுப் போட்டி

நன்மதி

சின்னஞ் சிறுவர்கள் என்றே—இன்னும்
சொல்லித் திரிந்திட எண்ணுதல் நன்றோ?
அந்நிய நாட்டில் ஒருவன்—அவன்
ஐந்து வயதுள்ள அற்புதச் சிறுவன் (1)

நீராவி யந்திரம் கண்டான்—அதன்
நேர்மை உணர்ந்து பலருக்கும் விண்டான்
ஆராய்ந்து பார்த்திடில் யாவும்—நம்போல்
அறியாத பாலகர் கண்டன ஆகும்.

வீரச் சிறுவரே, வாரீர்—செய்ய
வேண்டிய உதவியை உலகிற்குத் தாரீர்
தீரம் இருந்திடிற் போதும்—நீங்கள்
திண்ணமாய்ச் செயலினை முடித்திட லாகும்.

—மயிலை. சிவ. முத்து.

கோழிக் குஞ்சு

முட்டைக்குக் கால்கள் முளைத்ததுபோல்—வெண்ணெய்
மொத்தை திரண்டு உருண்டது போல்
கொட்டிய பஞ்சு குதித்ததுபோல்—கோழிக்
குஞ்சுகள் ஓடித் திரியுது பார்

பெட்டையைச் சுற்றி வருகுதுபார்—அதன்
பின்னும் முன்னும் தொடர்ந் தோடுது பார்
எட்டி முதுகிலே ஏறுதுபார்—தோட்டம்
எங்கும் பவனி வருகுது பார் 2.

தத்தித் தரையில் குதிக்குதுபார்—ஒன்று
தாவி அரிசியைக் கொத்துது பார்
பத்துக்குஞ் சோடி வருகுதுபார்—அங்கே.
பாய்ந்து அமர்க்களம் பண்ணுது பார்.

—சுரபி.

2—3 ஆம் வகுப்புக்கள்—கதை சொல்லும் போட்டி

கீழே குறிப்பிடப்பட்ட கதை அல்லது சரிதைகளில் ஒன்றினைக் குறித்து ஏறத்தாழப் பத்து வாக்கியங்கள் உணர்ச்சி தோன்றச் சொல்லுதல் வேண்டும்.

1. காந்தி தாத்தா, 2. பாரதியார். 3. ஒளவையார் முதலிய பெரியோர்கள் சரிதை அல்லது அறிவை வளர்க்கத்தக்க சிறு கதைகள்.

2—3 ஆம் வகுப்புக்கள்—பாட்டுப் போட்டி

மழை

மழையே மழையே பெய்வாயே
மாணவர் மகிழச் செய்வாயே 1.

வெள்ளிக் கம்பிக ளாய்மழையே
வெள்ளம் ஓடிடப் பெய்மழையே 2.

சிறிதே தூறிச் செல்லாதே
சிறியோர் துயரம் பொல்லாதே 3.

கப்பல் பலவே பண்ணுவமே
கடிதில் விடவே எண்ணுவமே 4.

கப்பல் கண்டால் எள்ளாதே
கடலில் கொண்டு தள்ளாதே. 5.

—மயிலை. சிவ. முத்து.

எங்கள் தம்பி

சின்னச் சின்ன பொம்மை போல்
சீனக் கார பொம்மை போல்
என்னைக் கண்டால் சிரித்திடும்
எங்கள் தம்பி பாருங்கள்! 1.

அம்மா அருகில் கொஞ்சவே
அப்பா வந்து கெஞ்சவே
சும்மா சும்மா சிரித்திடும்
சொகுசுத் தம்பி பாருங்கள்! 2.

தங்கம் போல மேனியாம்
தாமரைக் கை கால்களாம்
பொங்கி வழிந்து சிரித்திடும்
புதுமைத் தம்பி பாருங்கள்.

—தணிகை உலகநாதன்.

பாப்பா வகுப்பும் முதல் வகுப்பும்—பாட்டுப் போட்டி

கொஞ்சிக் கொஞ்சிப் பேசும்
பஞ்சவர்ணக் கிளியே,
நல்லப் பேச்சுப் பேசு;
நாட்டியங்கள் ஆடு;
முத்தம் கொடுக்க வந்தால்
முகத்தில் குத்த வேண்டாம்;
'திருட்டுப் பையன்' என்றால்
திரும்பிப் பார்க்க மாட்டேன்.

—மயிலை. சிவ. முத்து.

மாமி சுட்ட பிட்டு
மடியில் வாங்கிக் கட்டு;
சீனி சர்க்கரை இட்டு,
சிறிது நெய்யும் சொட்டு;
உண்டு ஏப்பம் விட்டு,
ஓடிவா நீ பட்டு.

—மணி கோபால்.

அறிவுக் கதிர்

அரசாங்கம் என்னை அழிக்க முயற்சிக்கலாம்—படைபலம் பாய்ந்து வரலாம், உலகே கேலி செய்யலாம். எனினும் நீதியை நிலை நாட்டி, ஏழையின் கண்ணீரைத் துடைத்தே தீருவேன்.

(எமிலி ஜோலா)

உலகமே என்னுடைய இல்லம், மனித சமுதாயமே என்னுடைய தோழன், பிறர்க்கு நன்மை செய்வதே என்னுடைய மனம், என் மனமே என்னுடைய கோயில். (தாமஸ் பெயின்)

21-ஆம் ஆண்டுப் பரிசுப் போட்டிகள்

1952

கல்லூரி (வித்துவான் வகுப்பு மாணவர் உட்பட)

கதை—கட்டுரை—கவிதைப் போட்டிகள்

பெருந்தகையீர்,

கட்டுரை எழுதும் வன்மையும், கதை புனையும் ஆற்றலும், கவிதை இயற்றும் திறனும் தெளிந்த அறிவுடைமைக்குத் தக்க எடுத்துக் காட்டுகள் என்பது தாங்கள் அறியாததன்று. மாணவர்களை இத்துறைகளில் ஊக்கித் தமிழ் வளர்க்கும் நோக்குடன் மன்றத்தினர் ஆண்டுதோறும் இத்துறைகளில் போட்டிகள் நடத்திப் பரிசளித்து வருகின்றனர். மாணவர்கள் இந்நல்வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ள உதவ வேண்டுகிறோம்.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தாங்கள் இருந்த இடத்திலிருந்தே போட்டிக்குரிய கவிதை, கட்டுரை, கதை. முதலிய வைகளை அனுப்பிவைக்க வேண்டும்,

பரிசுகள் :	முதல் பரிசு	வெள்ளிக் கோப்பை
	இரண்டாம் பரிசு	வெள்ளிப் பதக்கம்
	மூன்றாம் பரிசு	தமிழ் நூல்

பரிசுகள் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே வழங்கப்பெறும்.

போட்டிகள் ஒவ்வொன்றிலும் நூற்றுக்கு அறுபதுக்குக் குறையாத மதிப்பெண் பெறுபவர்களுக்கு முதல்தர நன்மதிப்பிதழும், ஐம்பதுக்குக் குறையாமல் பெறுபவர்க்கு இரண்டாந்தர நன்மதிப்பிதழும், நாற்பதுக்குக் குறையாமல் பெறுபவர்க்கு மூன்றாந்தர நன் மதிப்பிதழும் வழங்கப்பெறும்.

கட்டணம்: **ஒவ்வொரு போட்டிக்கும் கட்டணம் அணா எட்டே ஆகும்.**

கட்டணத்தை மணியார்டர் மூலமே அனுப்புதல் வேண்டும். தபால் தலைகளாக அனுப்புதல் கூடாது. பலர் ஒன்று சேர்ந்தும் அனுப்பலாம். நேரில் தந்தும் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் வரைந்தனுப்பும் முறை :

மாணவர் பெயர், பெற்றோர் பெயர், வீட்டு முகவரி, படிக்குடி கல்லூரியும் வகுப்பின் பிரிவும், கலந்து கொள்ள விரும்பும் போட்

கள் ஆகிய விவரங்களும், தலைமைப்பேராசிரியர் அல்லது தமிழ்ப் பேராசிரியர் கையொப்பமும் விண்ணப்பத்தாளில் இருத்தல் வேண்டும்.

கட்டணமும் விண்ணப்பமும் அனுப்பவேண்டிய இறுதி நாள் 15-10-52

போட்டிக் கட்டுரை, கதை கவிதை முதலியவைகளை அனுப்பி வைக்க வேண்டிய இறுதி நாள் 31-10-52

அனுப்பப்படவேண்டிய முகவரி :—

மயிலை சிவ முத்து, போட்டிக் குழுத்தலைவர், **மாணவர் மன்றம்,** 17, இரத்தின முதலி தெரு, கொண்டித் தோப்பு, சென்னை—1.

குறிப்பு : போட்டிகளுக்குரிய கவிதை கட்டுரை, கதை முதலியவைகள் அந்த மாணவராலேயே எழுதப்பட்டன என்று தலைமைப் பேராசிரியரோ, தமிழ்ப்பேராசிரியரோ உறுதிமொழி அளிக்கவேண்டும். உறுதி மொழியின்றி வருபவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

தெளிவான கையெழுத்தில் விளக்கமாக மையினால் எழுதி அனுப்புதல் வேண்டும். தாளின் இருபுறமும் எழுதுதல் கூடாது. எழுதுதற்குச் செலவான நேரத்தையும் குறித்தனுப்புக.

போட்டி விவரம்

1. **கட்டுரை :** கீழ் வரும் தலைப்புகளில் ஒன்று குறித்து ஆறு பக்கங்கட்கு மிகாமல் எழுதி அனுப்புதல் வேண்டும்.

   (1) நம் நாட்டுப் படக் காட்சிகளால் நேரத்தக்க நன்மை தீமை அவைகளைக் குறித்து உன் எண்ணமும்.

   (2) நீ நம் நாட்டுக் கல்வி முறையினை மாற்றி அமைக்கும் பேற்றினைப் பெற்றால் என்னென்ன திருத்தங்கள் புரிவாய்?

   (3) நம் நாட்டின் இயல்புக்கு ஜாதி மத வேறுபாடுகள் சிறிதும் அவசியம் இல்லை (மறுத்தேனும் ஆதரித்தேனும் எழுது.)

2. **கவிதை :** கீழ்க்குறித்த கருத்துக்களில் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு ஐந்து பாடல்கள் அல்லது இருபது வரிகள் கவிதை எழுதி அனுப்புதல் வேண்டும். கருத்துச் செறிவும் சொற்களின் அமைப்பும் ஓசை நயமும் கவனிக்கப்படும்.

   (1) ஆசிரியர்களின் நிலையினை நினைந்தேனும், கல்வி முறையினை நினைந்தேனும் பாடல்கள்.

(2) நம் நாட்டின் நிலை உயர்தல் "என்நாளோ" என வினவும் முறையிலேனும், "விழிமின்" அல்லது "எழுமின்" என மக்களை முன்னிலைப் படுத்தியேனும் உணர்ச்சி ஊட்டும் பாடல்கள்.

(3) இயற்கை வருணனைப் பாடல்கள் அல்லது சீர்திருத்தச் செயல்களைப் போற்றும் பாடல்கள்.

3. **கதை அல்லது நாடகம்: (ஆறு பக்கங்கட்கு மிகாமல்)**

(1) நல்ல நீதிகளோடு கூடிய பொய்க் கதைகள் (Fairy Tale)

(2) கலப்பு மணத்தில் விருப்பங் கொண்ட ஒரு கல்லூரி மாணவனும் ஓர் இளங் கைம்பெண்ணும் பலப்பல இன்னல்களை எய்தி எதிர்ப்புக்களை வென்று தம் கொள்கையை நிலை நாட்டியதாக ஒரு கற்பனைக் கதை.

(3) நம் நாட்டுக் கோயில்களிலும், குகைகளிலும் மாமல்லபுரம் போன்ற பிற இடங்களிலும் உள்ள சிற்பங்களில் ஒன்று உயிர் பெற்றுத் தன் உண்மை வரலாற்றினை உரைப்பதாகச் சரித சம்பந்தமான ஒரு கற்பனைக் கதை.

நன்றி: நாங்கள் மகிழ்ச்சி கொள்ளும் வகையில் இப்போட்டிகளைச் சென்ற ஆண்டு மிக வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்த அறிஞர் அனைவருக்கும் எங்கள் பணிவார்ந்த வணக்கமும் நன்றியும் உரியனவாகுக.

குறிப்பு:—மாணவர்கள் தாங்கள் எழுதும் கதை, கட்டுரை முதலியவைகளுக்குப் படி எடுத்து வைத்துக்கொண்டு அனுப்ப வேண்டுகிறோம். போட்டிக்கென அனுப்பப்பட்டவைகளின் உரிமைகள் முழுவதும் மன்றத்திற்கு உரியனவாகும்.

இங்ஙனம்,

டாக்டர். S. தருமாம்பாள், தலைவர்

வல்லை. பாலசுப்பிரமணியம், B. A.
A. M. கணபதி, M. A.
அமைச்சர்கள்

அறிவுக் கதிர்

பழைய பஞ்சாங்கத்தைப் படித்தாலும், பிழிந்தாலும் சொட்டு மழையாவது வருமா? ராசி பலனைப் பாடம் பண்ணினால் வயல் விளையுமா? உலகின் முன்னேற்றம் உழைப்பில் உள்ளது நன்றாக பாடுபடு

(ரஷ்ய கவிஞர்)

மாணவர் மன்றம், சென்னை

(துவக்கம் 1931)

21-ஆம் ஆண்டுப் பரிசுப் போட்டிகள்

ஓவியப் போட்டி

1952

தொடக்கநிலை—நடுநிலை—உயர்நிலைப் பள்ளி வகுப்புக்கள்
கல்லூரி—வகுப்புக்கள்

அன்புடையீர்,

மாணவர் மன்றச் சார்பில் ஆண்டுதோறும் கட்டுரை, கதை, கையெழுத்து முதலிய பலவகைப் போட்டிகள் நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததேயாகும். அவ்வகைப் போட்டிகள் மாணவர்கட்குப் பெருந்துணை புரிந்து வருவது கண்டு அறிஞர்கள் ஓவியத் துறையிலும் இத்தகைய போட்டிகள் நடைபெற்றால் மாணவர்களிடை மறைந்து கிடக்கும் கலையுணர்வைத் தூண்டிவிட வாய்ப்பாக இருக்கும் என்று எங்கட்கு ஆலோசனை கூறினார்கள். அவர்கள் அறிவுரையை யேற்றுக் கீழ்க்கண்ட முறைகளில் இவ்வாண்டு 'ஓவியப் போட்டி' ஒன்றும் நடத்த முற்பட்டோம். மாணவர்கள் இப்போட்டிகளில் மிகுதியாகக் கலந்து கொண்டு எங்கள் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறோம். தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள எல்லா வகுப்பு மாணவர்கட்கும் அவரவர் தகுதிக்கேற்ப இப்போட்டித் திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன. ஆதலின் கல்லூரித் தலைமைப் பேராசிரியர்களும், தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், ஓவிய ஆசிரியர்களும் ஏனைய அறிஞர்களும் எங்களுடன் இவ்வகையில் ஒத்துழைத்து மாணவர்கள் மிகுந்த அளவில் பங்குகொள்ள ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

பரிசுகள்

தொடக்க நிலைப்பள்ளி:

முதல் பரிசு	வெள்ளிக் கோப்பையும்	10	ரூபாயும்
இரண்டாம் பரிசு	வெள்ளிப் பதக்கமும்	5	,,
மூன்றாம் பரிசு	தமிழ் நூல்களும்	3	,,
நான்காம் பரிசு		3	ரூபாய்
ஐந்தாம் பரிசு	(ஐந்து பரிசுகள்)	2	,,

நடுநிலைப் பள்ளி :

முதல் பரிசு	வெள்ளிக் கோப்பையும்	15 ரூபாயும்
இரண்டாம் பரிசு	வெள்ளிப் பதக்கமும்	10 ,,
மூன்றாம் பரிசு	தமிழ் நூல்களும்	5 ,,
நான்காம் பரிசு		5 ரூபாய்
ஐந்தாம் பரிசு	(ஐந்து பரிசுகள்)	3 ,,

உயர் நிலைப் பள்ளி :

முதல் பரிசு	வெள்ளிக் கோப்பையும்	20 ரூபாயும்
இரண்டாம் பரிசு	வெள்ளிப் பதக்கமும்	15 ,,
மூன்றாம் பரிசு	தமிழ் நூல்களும்	10 ,,
நான்காம் பரிசு		10 ரூபாய்
ஐந்தாம் பரிசு	(ஐந்து பரிசுகள்)	5 ,,

கல்லூரி ;

முதல் பரிசு	வெள்ளிக் கோப்பையும்	25 ரூபாயும்
இரண்டாம் பரிசு	வெள்ளிப் பதக்கமும்	20 ,,
மூன்றாம் பரிசு	தமிழ் நூல்களும்	15 ,,
நான்காம் பரிசு		15 ரூபாய்
ஐந்தாம் பரிசு	(ஐந்து பரிசுகள்)	10 ,,

ஏனையவர்க்குத் தகுதி நோக்கி முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு நன்மதிப்பிதழ்கள் வழங்கப்பெறும்.

குறிப்பு :—பரிசு பெற்ற படங்கள் மாணவர் மன்றத்திற்கு உரிமையானவையாம்.

கட்டணம்

தொடக்க நிலைப் பள்ளி Classes I to V ஒரு படத்திற்கு	0-2-0
நடுநிலைப் பள்ளி Forms I to III ஒரு படத்திற்கு	0-4-0
உயர்நிலைப் பள்ளி Forms IV to VI ஒரு படத்திற்கு	0-6-0
கல்லூரி வகுப்புகள் ஒரு படத்திற்கு	0-8-0

கட்டணமும் விண்ணப்பமும் அனுப்பவேண்டிய இறுதி நாள் **15-10-52.**

விண்ணப்பம் எழுதி அனுப்பும் முறை :

1. மாணவர் பெயர் (விளக்கமாக). 2. வயது. 3. படிக்கும் வகுப்பும் வகுப்பின் பிரிவும். 4. பள்ளியின் பெயர். 5. பெற்றோர் பெயரும் தொழிலும். 6. வீட்டு முகவரி. 7. போட்டிக்கு அனுப்பும் படங்கள் இத்தனை என்ற விவரம் ஆகியவைகளைத் தெளிவாகத் தமி

ழிலேயே எழுதித் தலைமை யாசிரியர் அல்லது ஓவிய ஆசிரியர் கை யொப்பமுடன் அனுப்பி வைத்தல்வேண்டும்.

கட்டணமும் விண்ணப்பமும் அனுப்பவேண்டிய முகவரி :

புலவர். மயிலை. சிவ முத்து.

போட்டிக்குழுத் தலைவர்,

17, மாணவர் மன்றம், சென்னை. 1

(பெத்துநாய்க்கன் பேட்டை. சிவஞானம் பார்க்கிற்கு அருகில்)

பலர் ஒன்று சேர்ந்தும் அனுப்பலாம். மணியார்டர் மூலமாக அன்றி வேறு வேறு வகைகளில் கட்டணம் அனுப்புதல் கூடாது. மணியார்டர் கூபனில் எங்களிடம் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் அனுப்புவோர் முகவரி விளக்கமாக எழுதவேண்டும். விண்ணப்பத் துடன் மணியார்டர் இரசீதையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். உள்ளூரில் உள்ளவர் நேரில் பணம் கட்டி இரசீது பெற்றுக்கொள் ளலாம்.

படங்கள் அனுப்பிவைக்க வேண்டிய இறுதி நாள் 31–10–52

கண்காட்சி

இப்போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களின் படங்களைக் கண்காட்சியாக அமைத்துப் பலரும் காணுமாறு செய்யவும் ஏற்பாடு செய்யப் பெறும்: இது பற்றிய விவரம் பின்னர். அறிவிக்கப்பெறும்.

போட்டிக்குரிய விதிகள்

பொது விதிகள் :

1. சித்திரப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் எத்தனைப் படங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். (கட்டணம் ஒவ்வொரு படத்திற்கும் தனித்தனி.)

2. அனுப்பும் படங்கள் ஒவ்வொரு பிரிவிற்கும் கொடுக்கப் பட்டுள்ள மாதிரிகளில் குறிப்பிட்ட அளவினவாய் இருத்தல் வேண் டும். நல்ல முறையில் குறிப்பிட்ட அளவுடைய அட்டை (Mount) களில் ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

3. ஒவ்வொரு படத்தின் பின்புறத்திலும் கீழ்க்கண்ட விவரங் களை ஒரு துண்டுத்தாளில் விளக்கமாக எழுதி ஒட்டி அனுப்புதல் வேண்டும் :

1. போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர் பெயர். 2, வயது. 3. படிக்கும் பள்ளியும், வகுப்பும் பிரிவும். 4. வீட்டு முகவரி. 5, எழு

திய படம் சொந்தமா அல்லது பார்த்து எழுதப்பட்டதா என்ற விவரம். 6. படத்திற்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு.

4. அனுப்பும் படங்களைப் பத்திரமாகப் போட்டிக் குழுத் தலைவர், மாணவர் மன்றம், 17, இரத்தின முதலி தெரு, சென்னை-1, என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

5 படங்களைத் திரும்பப் பெற விரும்புபவர் (பரிசு பெற்ற படங்கள் தவிர) டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் மாணவர் மன்றத்திலிருந்து காலை 10 மணிக்குமேல் மாலை 6 மணிக்குள்ளாக நேராக வந்தோ அல்லது ஆதாரக் கடிதம் காட்டியோ பெற்றுச் செல்லலாம். தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டியவர்கள் விவரம் அறிவித்துப் போதிய தபால் தலைகள் வைத்து அனுப்புதல் வேண்டும்.

சிறப்பு விதிகள்

I. 1–ஆம்–வகுப்பு முதல் 5–ஆம் வகுப்புவரை (தொடக்க நிலைப் பள்ளி):

(1) படத்தின் அட்டை (Mount) அளவு 10" x 8".

(2) வீட்டில் வளர்க்கும் மிருகங்கள், பறவைகள், கட்டிச்சித்திரங்கள் (Mass Drawings), மரங்கள், பலவித வண்டிகள், கிராமியச் சிறுகுடிசைகள் போன்றவைகளில் ஒன்றோ பலவோ எழுதி அனுப்பலாம். படங்கள் சொந்தக் கற்பனையாகவும் இருக்கலாம்; பார்த்து எழுதப்பட்டவையாகவும் இருக்கலாம்.

II. 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை (Forms I to III) நடுநிலைப் பள்ளி.

(1) அளவு: படத்தின் அட்டை (Mount) அளவு 12" x 10".

(2) தண்ணீரில் தெரியும் தோற்றங்கள், மிருக உறுப்புக்கள், தினசரி வீட்டில் பார்க்கும் காட்சிகளில் ஒன்று, சந்தை, கடைவீதி முதலியவைகளின் தோற்றங்கள், பஸ் நிற்கும் இடங்களின் தோற்றங்கள், படகுகள், சாரணர் முகாம் (Camps), மாணவர்கள் படிக்கும் பலவித தோற்றங்கள். இவைகளில் ஒன்றோ பலவோ எழுதி அனுப்பலாம். படங்கள் சொந்தக் கற்பனைகளாகவோ, பார்த்து எழுதப்பட்டனவாகவோ இருக்கலாம்.

III. 4 ஆம் படிவம் முதல் 6 ஆம் படிவம் வரை. (Forms IV to VI) உயர் நிலைப் பள்ளி.

(1) அளவு: படத்தின் அளவு 15" x 12".

(2) காட்சிகளையோ, பொருள்களையோ, உருவத் தோற்றங்களையோ நேரில் பார்த்துச் சொந்தமாக எழுதி அனுப்புதல் வேண்டும். தேசத் தலைவர்கள் படங்களை மட்டும் பார்த்து எழுதி அனுப்பலாம். பூக்கள், அழகான கொடி வேலைப்பாடமைந்த பொருள்கள், கட்டடத்தின் உள் தோற்றங்கள், கிராமத் தோற்றங்கள், நகர வீதி தோற்றங்கள், இயற்கைக் காட்சிகள் கேளிக்கைச் சித்திரங்கள், பலவித தோற்றங்களில் மனித உறுப்புக்கள், கட்டிச் சித்திரங்கள் (Silhouette Figures) சிற்பங்கள், பெரியோர்களின் உருவங்கள் ஆகியவைகளில் ஒன்றோ பலவோ எழுதி அனுப்பலாம்.

(3) எண்ணெய்—கலந்த வர்ணம், தண்ணீர் கலந்த வர்ணம், இங்க், Crayon பென்சில் இவைகளில்தெரிந்த முறைகளைக்கொண்டு எழுதி அனுப்பலாம்.

IV. கல்லூரி வகுப்பு:

(1) அளவு: படத்தின் அளவு 18" x 15".

(2) பலவித உணர்ச்சியுள்ள முகத்தோற்றங்கள், தன்னுடைய உருவத்தைக் கண்ணாடியில் பார்த்து எழுதி அனுப்புதல், தற்காலக் கட்டடங்கள், சர்ச், கோபுரங்கள், கோயில்கள், சிற்பங்கள், இயற்கையின் இரவுத் தோற்றங்கள், தினசரி வாழ்க்கைக் குறிப்புக்கள், ஏழை, பணக்காரர்கள், நடனத் தோற்றங்கள், பழங்கால இந்திய சிற்பங்கள். ஓவியங்கள், சரித்திர சம்பந்தமான காட்சிகள், இலக்கியக் காட்சிகள் இவைகளில் ஒன்றோ பலவோ எழுதி அனுப்பலாம் (வேறொரு படத்தைப் பார்த்து அப்படியே எழுதுதல் கூடாது. மாணவர்களின் சொந்தக் கற்பனையும் கலந்திருக்கவேண்டும்.

(3) தக்க வர்ணக் கலவை மிக முக்கியமாகக் கவனிக்கப்படும். காலத்துக்கேற்ற உருவ அமைப்பு, உடை, அணிவகைகள் முதலியனவும் முக்கியமாகக் கவனிக்கப்படும்.

குறிப்பு: மேற் குறிப்பிட்ட விவரம் தவிர வேறு ஏதேனும் சிறப்பாக அறிய விரும்பினால் மன்ற முகவரிக்கு இரண்டணா தபால் தலையுடன் எழுதுக. தபால் தலையின்றி வரும் கடிதங்களுக்குப் பதில் விடுக்க இயலாது.

இங்ஙனம்:

டாக்டர். S. தருமாம்பாள்
தலைவர்

வல்லை. பாலசுப்பிரமணியம் B.A.
A. M. கணபதி M.A.
அமைச்சர்கள்

Edited, Printed and Published, by P. Veeraraghavan, at Venkatesan Press, 94/95 New St. Mannady, Madras—1.